# திருக்கல்யாணத் தாய்

www. thirukalyanamatha.com தொலைபேசி : 04639 - 261230
kalyanamatha@gmail.com

ஆசிரியர் & வெளியிடுபவர்
அருட்திரு.முனைவர் R. ஜோசப் ரவிபாலன்

**ஆலோசகர் குழு**
அருட்திரு. ஜாண் போஸ்கோ
அருட்திரு. சிலுவை தங்கம்
அருட்திரு. டென்சில் ராஜா
அருட்திரு. ஜோசப் ஸ்டார்லின்
அருட்திரு. ஜோசப் பாக்கியராஜா
அருட்சகோதரி. புளோரா

**ஆசிரியர் குழு**
அருட் சகோதரி. மைக்கிள்
திரு. ஜெயசீலன் அந்தோணிராஜ்
திரு. அந்தோணி ஜெயராஜ்
திரு. பெலிக்ஸ் அந்தோணி
திரு. ஜோசப் ததேயூஸ் ராஜா
திருமதி. ரெவின்யூஸ் ராணி
திரு. மெசியாஸ்

**தொடர்பு முகவரி**
திருத்தல அதிபர்
திருக்கல்யாணத்தாய் திருத்தலம்
பொத்தக்காலன்விளை 628 702
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04639 - 261230

**விளம்பரம் செய்ய தொடர்புக்கு...**
திருத்தலக்கடை : 04639 -261330
திருத்தல அலுவலகம் : 04639 -261430

## மலரின் உள்ளே...

| | |
|---|---|
| ஆசிரியரின் அருளுரை | 1 |
| திருப்பாடல்கள் அறிமுகம் | 2 |
| புனித கிளாரா | 6 |
| முதல்சனி வழிபாடு | 7 |
| கன்னிமரியின் விண்ணேற்பு | 11 |
| திருச்சபை செய்திகள் | 12 |
| புனித வின்சென்ட்தேபவுல் | 16 |
| நற்கருணை பற்றி புனிதர்கள் | 18 |
| கவிதைச் சோலை | 20 |
| குட்டீஸ் கார்னர் | 23 |
| இந்திய சுதந்திரப் போர் | 27 |
| வாழ்வு தரும் வார்த்தைகள் | 31 |
| திருவிவிலியம் நமது செல்வம் | 32 |

வாங்கிவிட்டீர்களா !

**திருக்கல்யாணத்தாய் மாத இதழ்**

சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்

உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டு சந்தா ரூ. 100

# ஆசிரியரின் அருளுரை



இயேசுவில் அன்புக்குரியவர்களே! திருக்கல்யாணத் தாயின் அருமையான பிள்ளைகளே!

நவம்பர் மாதம் உத்தரிக்கிற நிலையில் இருக்கும் ஆன்மாக்களுக்கென்று அர்ப்பணிக்கப்பட்டுள்ள மாதம். இறப்புக்குப்பின் மறு வாழ்வு உண்டு என்கிற நம்பிக்கை கத்தோலிக்கக் கிறிஸ்தவத்தில் வேரூன்றியிருக்கிறதை யாரும் மறுக்க முடியாது. பழைய ஏற்பாட்டுப் பாரம்பரியத்தில் இறப்புக்குப்பின் மறு வாழ்வு உண்டு என்கிற நம்பிக்கை பல நூற்றாண்டுகளாக இல்லை என்பதுதான் உண்மை. மறு வாழ்வு பற்றிய நம்பிக்கை பாபிலோனிய அடிமைத்தனம் (கி.மு.6ஆம் நூற்றாண்டு) தந்த மிகக் கசப்பான அனுபவத்திற்குப்பின் படிப்படிப்பாகத்தான் வளர்ந்தது என்கிறக் கருத்திற்கு மாற்றுக் கருத்து கிடையாது. இவ்வுலக வாழ்க்கைக்குப்பின் மோட்சம், நரகம் மற்றும் உத்தரிக்கிற நிலை என்கிற கருத்து கிறிஸ்தவத்தால் வளர்க்கப்பட்டக் கருத்து.

இஸ்ரயேலரின் நம்பிக்கை கூறுவது என்ன? இறந்தபின் ஒருவரின் உடலிலிருந்து ஆன்மா பிரித்தெடுக்கப்படும்: உடல் மண்ணோடு மண்ணாய் மக்கிப்போய் விடும்: அழியாத ஆன்மா பாதாள உலகிற்குள் (எபிரேய மொழியில் "Sheol" என்றும், கிரேக்க மொழியில் "Hades" என்றும் அழைக்கப்படுகிறது) சென்று, அங்கே அசைவற்ற நிலையில் அப்படியே இருந்து விடும். இவ்வுலகில் உயிருடன் வாழ்ந்தபொழுது நல்லவனாய் வாழ்ந்தாலும் சரி,தீயவனாய் வாழ்ந்தாலும் சரிஇறப்புக்குப்பின் ஒரே நிலைதான். அசைவற்ற நிலை: எந்த உணர்வுகளும் இல்லாத நிலை. அப்படியானால் இவ்வுலகில் வாழும்போது எப்படி வேண்டுமானாலும் வாழலாமா? செய்த நன்மைகளுக்கு வெகுமதியும், தீமைகளுக்குத் தண்டனையும் கிடையாதா? இப்படி கேள்விகள் எழுவது நியாயமே.

பழைய ஏற்பாட்டுக்கால மக்களின் நம்பிக்கையின்படி பார்த்தால், இவ்வுலகில் வாழும் காலத்தில் நன்மைகள் செய்து, மனச்சாட்சியின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்கள் கடவுளால் நிரம்ப ஆசீர்வதிக்கப்படுவர். கடவுளின் ஆசீர்வாதம் எவ்வாறு அவர்களால் புரிந்து கொள்ளப்பட்டது? ஒருவர் கடவுளின் ஆசீர்வாதத்தைப் பெற்றுள்ளளார் என்றால், அவர் செல்வச் செழிப்பு மிக்கவராய் இருப்பார் என்றும், நிறைய குழந்தைகளைப் பெற்று, நீடிய ஆயுளுடன் இவ்வுலகில் வாழ்வார் என்றும் கருதப்பட்டது.

ஆனால் இந்தக் கருத்து படிப்படியாக மறைந்தது என்றும், குறிப்பாக, பாபிலோனிய அடிமை நிலைக் காலத்திற்குப்பின் மறையத் தொடங்கியது என்றும் அறிகிறோம்.பாபிலோனிய அடிமை நிலையின் போது , நல்லவர்களும் துன்புற்று, மாண்டனர்: பலர் நாடு கடத்தப்பட்டனர். நல்லவர்கள் அனுபவித்தத் துன்பங்களைப் பற்றி என்ன கூறுவது? நல்லவர்களுக்கும் தீயவர்களுக்கும் வித்தியாசமில்லாத நிலை இருப்பதாய் மக்கள் உணரத் தொடங்கினர். நல்லவர்களாய், கடவுளுக்கு ஏற்புடையவர்களாய், மனிதரால் மதிக்கப்பட்டவர்களாய் இருந்து என்ன பலன் ? பாபிலோனியப் படையெடுப்புகளின்போது, நல்ல வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தவர்களுள் பலர் உயிரிழந்தனர்: சொத்துகளை இழந்தனர்; செல்வத்தை இழந்தனர்; குழந்தைகளை இழந்தனர்; நாடு கடத்தப்ப ட்டனர். ஏன்? இதற்கு என்ன பதில்? இந்த கேள்விக்கு பதில் தேட

முற்பட்டனர். அவர்களின் பாரம்பரியச் சிந்தனை மாறத் தொடங்கியது . புதிய சிந்தனை படிப்படியாக உருப்பெற்றது.

நல்லவர்களுக்கு நன்மையும், தீயவர்களுக்குத் தண்டனையும் இந்த உலகில் வாழும் போது இருக்காது என்றாலும், இறப்புக்குப்பின் வரும் மறு வாழ்வில் நல்லவர்களுக்குச் சிறந்த வெகுமதியும், தீயவர்களுக்கு எக்காலத்திற்கும் தண்டனை உண்டு என்கிற கருத்து படிப்படியாய் நிலைபெற்றது. யூத மக்களிடத்தில் இறப்புக்குப்பின் வரும் மறு வாழ்வு குறித்து கருத்து வேறுபாடுகள் இருக்கத்தான் செய்தன. பரிசேயர்கள் இறந்தோரின் உயிர்ப்புக் குறித்தும், மறு வாழ்வு குறித்தும் நம்பிக்கை வைத்திருந்தனர். ஆனால் சதுசேயர்கள் இந்தக் கருத்தினை ஏற்க மறுத்தனர். மறு வாழ்வு பற்றிப் புதிதாக உருவாகிருந்தக் கருத்தினை இயேசு கிறிஸ்து மிகத் தெளிவாய் மக்களிடத்தில் எடுத்துச் சொன்னார். அவரது இறப்பும் உயிர்ப்பும் மறு வாழ்வு உண்டு என்கிற நம்பிக்கையை உறுதி செய்வதாக நாம் அறிகிறோம். திருச்சபையும் இயேசுவின் உயிர்ப்பு தரும் நம்பிக்கையின் அடிப்படையில் மோட்சம், நரகம், உத்தரிக்கிற நிலை உண்டு என்பதை உறுதியாக எடுத்துச் சொல்லிக் கற்பிக்கிறது.

உத்தரிக்கிற நிலையில் இருக்கும் ஆன்மாக்கள் தாங்கள் செய்த சாதாரணப் பாவங்களுக்கு சிலகாலத்திற்குத் தண்டனையை அனுபவித்தப் பின்புதான் மோட்சம் சேர முடியும் என்பது திருச்சபை நமக்குக் கற்றுத்தரும் பாடம். உத்தரிக்கிற ஆன்மாக்கள் தங்களுக்காக கடவுளிடம் மன்றாட முடியாது என்றும், தங்களுக்காக எந்தப் பரிகாரமும் செய்ய முடியாது என்றும் திருச்சபை நமக்குத் தெளிவாகப் போதிக்கிறது.அவர்கள் மோட்ச வாழ்வைப் பெற அவர்களுக்காக மன்றாடுவதும், நற்செயல்களைச் செய்வதும் மண்ணில் வாழும் நம் கடமை ஆகும். ஆகவே தான் இறந்தோருக்காக நாம் செபிக்கிறோம்; திருப்பலி நிறைவேற்றுகிறோம்; நல்ல செயல்கள் புரிகிறோம். நாம் சொல்லும் செபங்கள், ஒப்புக் கொடுக்கும் திருப்பலிகள், நமது நல்ல செயல்கள் இறந்த ஆன்மாக்களுக்கு உதவுகின்றன. ஏற்கனவே வானக வீட்டில் நுழைந்துள்ள ஒருவருக்காக மன்றாடி என்ன பயன்? இது இயல்பான கேள்விதான். இக்கேள்விக்கு என்ன பதில் கூறலாம்? நம் மன்றாட்டு ஒரு போதும் வீண் போகாது. ஒருவருக்காக நாம் நிறைவேற்றும் செபங்கள், ஒப்புக்கொடுக்கும் திருப்பலிகள், செய்யும் நற்செயல்கள் ஒருவேளை நாம் யாரை நினைத்து செய்கிறோமோ அவருக்குத் தேவையில்லாமல் இருக்கலாம்.ஆனால் நமது ஆன்மீக முயற்சிகள் மறக்கப்பட்ட நலையில் இருக்கும் வேறு ஓர் ஆன்மாவுக்கு நிச்சயமாகப் பயன்படும் என்பது திருச்சபை நமக்குத் தரும் அருமையான பாடம். ஆகவே உத்தரிக்கிற நிலையில் இருக்கும் ஆன்மாக்களுக்காக நாம் தொடர்ந்து கடவுளிடம் மன்றாட வேண்டும்.அது ஒரு தலைசிறந்த பிறரன்புச் செயல் என்பதில் துளியேனும் சந்தேகமில்லை.

கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படையில், இறந்தவர்களுக்காக மன்றாடுகிறோம். அதே வேளையில் அவர்களிடமும் நாம் அவர்களின் பரிந்துரை நாடி மன்றாடலாம். தங்களின் பாவங்களுக்குரிய தண்டனையை அனுபவித்தப்பின் கடவுளுடன் வானக வீட்டில் வாழும் அவர்களும் புனிதர்கள்தானே! அவர்கள் புனிதர்கள் என்கிற திருச்சபையின் அங்கீகாரம் அவர்களுக்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால் மோட்சப் பாக்கியத்தை அடைந்து கடவுளின் பிரசன்னத்தில் இருக்கும் அவர்களும் நமக்காக இறைவனிடம் பரிந்துரைக்க முடியும் என்பதை அறிந்து அவர்களிடம் நாம் நம் வேண்டுதல்களை வழங்குவதில் தவறேதும் இல்லை. ஆகவே இறந்தோருக்காக மன்றாடும் பிறரன்புச் செயலைத் தொடர்ந்து நிறைவேற்றுவோமாக!

– அருட்திரு. முனைவர். **R.ஜோசப் ரவிபாலன்**
**திருத்தல அதிபர்**
திருக்கல்யாணமாதா திருத்தலம், பொத்தக்காலன்விளை.



# திருப்பாடல் 3

அருட்திரு. முனைவர். **R.ஜோசப் ரவி பாலன்**

மூன்றாம் திருப்பாடல் தனியாரின் புலம்பல் வகையைச் சேர்ந்தது. எதிரிகளினால் சுற்றி வளைக்கப்பட்ட ஓர் அரசன் ,தன் எதிரிகளினால் தனக்கு நேர்ந்த இக்கட்டான நிலை குறித்து , இறைவனிடம் குரலெழுப்பி அவரது உதவியை நாடும் விதத்தில் பாடுவதுபோல் இத்திருப்பாடல் அமைந்துள்ளது. அப்சலோம் தன் தந்தை தாவீதுக்கு எதிராக போர்க்கொடி தூக்கி , எருசலேமை நோக்கிச் சென்றபோது , தாவீது தன் ஆட்களுடன் எருசலேமை விட்டு தப்பி ஓடியபோது , தனக்கு நேர்ந்துள்ள துன்பத்தை நினைத்துப் புலம்பி , இப்பாடலைப் பாடினார் என்று சொல்லப்படுகிறது

(காண்க. 2 சாமு 15-18). தாவீது ஆண்டவரைப் பார்த்துக் கூவி அழைக்கும் போது. ஆண்டவர் திருமலையிலிருந்து அவருக்கு பதில் தருகிறார்

(திபா 3:4).

இப்பாடலை நான்கு பிரிவுகளாக பிரிக்கலாம் : 1. இறை வாக்கியங்கள் (இவா) 1-2-புலம்பல்; இவா 3-6- நம்பிக்கையைத் தெரிவித்தல்; இவா 7-செபம் கேட்கப்படும் என்கிற உத்திரவாதம்; இவா 8-மீட்பு எல்லோருக்கும் பொதுவானது.

புலம்பல் என்றால் அதுவும் ஒரு வகையான செபம்தான் . தாவீது அரசர் தன் மகன் மூலம் சந்திக்கின்ற ஆபத்தை நினைத்து , மிகவும் மனம் வெதும்பி , தன் வேதனையையும் , துன்பத்தையும் கண்ணீர் சிந்திப் புலம்புவதின் மூலம் ஆண்டவருக்குத் தெரியப்படுத்துகிறார். இப்பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ள சில சொற்களிலிருந்து , இப்பாடல் தனிப்பட்ட நபரின் செபம் தான் என்று யாராலும் ஏற்றுக்கொள்ள முடியும். என்னை எதிர்த்து எழுவோர் (இவா 1:7) என்கிற புலம்பலை உணர்த்தும் பதத்திற்கு எதிர் அர்த்தம் தரும் வார்த்தைகளாகிய 'விடுவித்தல் அல்லது விடுதலை' (இவா 2:7-8) ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன. சுற்றிப் பெரிய மதில்போல் நின்றுகொண்டிருக்கும் ஆபத்துகளின் மத்தியில் இருக்கும் நபர் ஆண்டவரை மட்டும்தான் உதவிக்காக கூவியழைக்க முடியும். ஆண்டவரின் மக்கள் தங்கள் விண்ணப்பத்தை ஆண்டவரிடம் எடுத்துச் சொல்வதற்கு உரிமையுள்ளது. ஆண்டவரும் அவர்கள்மீது மனமிறங்கி, அவர்களை பலவித ஆபத்துகள் மற்றும் துன்பங்களிலிருந்து காப்பாற்றுகிறார் என்று இப்பாடலின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

ஆண்டவர் தாவீதை அரசராக உயர்த்தினார். ஆனால் தன் சொந்த மகனிடமிருந்து அவருக்கு எதிர்ப்பு வந்ததை அறிந்ததும், அவரால் தலை நிமிர முடியவில்லை. அவமானப்பட்டு, கூனிக் குறுகி, தாங்க முடியாத வேதனையுடன் தன் உயிரை காத்துக்கொள்வதற்காக தாவீது செல்கிறார். அவர் ஓடிச்


தாவீது அரசன் ஆண்டவரை நோக்கி அழுது புலம்பி செபிக்கிறார்

செல்லும்போது பகைவர்களின் கூட்டம் அவரைப் பார்த்து கொக்கரித்து, கேலிப் பரிகாசம் புரிந்து, கடவுள் அவனை விடுவிக்க மாட்டார் என்று மமதையுடன் பேசுகின்றது. தாவீது தன் நிலையை ஆண்டவருக்கு எடுத்துச் சொல்லி புலம்பு கிறார். அது அவநம்பிக்கை யின் அழுகைக்குரல் அல்ல: வேதனையை வெளிப் படுத்தும் தாவீதின் குரலில், இறை நீதியைப் பெறுவதற்கான ஏக்கம் தெரிகிறது. அநியாயமாக தன் மூத்த சகோதரன் காயினால் வெட்டி வீழ்த்தப்பட்ட ஆபேலின் இரத்தம் நீதி கேட்டு இறைவனிடம் அழுகுரல் எழுப்பியதுபோல (தொநூ 4:10), குற்றமற்ற நிலையிலுள்ள இப்பாடலின்ஆசிரியரின் அழுகையும், கண்ணீரும் ஆண்டவரிடம் நீதி கேட்டுப் புலம்புவதாக புரிந்துக்கொள்ள வேண்டும். அவரது புலம்பல் இறை நம்பிக்கையை வெளிப்படுத்தும் செபம் என்பது,இப்பாடலில் தொடருகின்ற வரிகளிலிருந்து நாம் தெரிந்துக்கொள்ளலாம்.

ஆண்டவரின் நன்மைத்தனத்தில் நம்பிக்கைக் கொண்டு அவரைப் பார்த்து, நீரே என்னைக் காக்கும் கேடயம்; நீரே என் மாட்சி; என்னைத் தலை நிமிரச் செய்பவரும் நீரே (இவா 3) என்று இப்பாடலை இயற்றியவர் தன்முழு நம்பிக்கையை ஆண்டவரிடம் காட்டுகின்றார். ஆண்டவரை தன் மாட்சி என்று வருணிக்கின்றார். ஒரு வேளை மாட்சி என்கிற சொல் ஆண்டவருக்குரிய பட்டங்களுள் ஒன்றாக இருக்கலாம். வேறோரிடத்தில் ஆண்டவர் மாட்சிமிகு மன்னர் என்றழைக்கப்படுகிறார் (திபா 24:8-10). ஆண்டவரின் வல்லமையை ஏற்றுக் கொண்ட ஆசிரியர், அவரை நோக்கி உரத்தக் குரலில் மன்றாடுகின்றார் (இவா 4). தம் திருமலையிலிருந்து ஆண்டவர் தனக்குச் சாதகமானப் பதில் தருவார் என்பது தாவீதின் உறுதியான நம்பிக்கை. ஆண்டவரிடம் அவர் கொண்டிருந்த நம்பிக்கையின் காரணமாக எந்த இடத்தில் வேண்டுமானாலும், தன்னால் அச்சமின்றி, படுத்துறங்கி, எழுந்திருக்க முடியும் என்று அழுத்தமாகக் கூறுகிறார் ஆசிரியர் (இவா5). பொதுவாக ஆபத்தைச் சந்திக்கும் நிலையில் இருப்பவர்கள், கொல்லப்படுவதற்காக தொடர்ந்து விரட்டப்படுகிறவர்கள், சொந்த நாட்டில் வாழ முடியாத நிலையில் அகதிகளாகத் திரிந்துகொண்டிருப்பவர்கள் எப்படி நிம்மதியாக தூங்குவார்? எந்நேரத்திலும் ஆபத்து நேரிடலாம் என்கிற அச்சத்தில் , அரைகுறைத் தூக்கத்தைத் தான் அவர்களால் அனுபவிக்க முடியும் .ஆனால் இந்தப் புலம்பல் பாடலைப் பாடுகிறவர் ஆபத்தை அருகில் கொண்டிருந்தாலும் , அவரால் நிம்மதியாக உறங்க முடிகிறது என்று சொன்னால் என்ன பொருள்? ஆண்டவரின் ஆதரவு தனக்கு இருக்கிறது

என்கிற எண்ணம் அவர் உள்ளத்தில் நிரம்பியிருக்கிறது என்றுதான் அர்த்தமாகிறது. கடவுள் நம் சார்பில் இருக்கும்போது , நமக்கு எதிராக இருப்பவர் யார்? (உரோ 8:31) என்று பவுல் கொண்டிருந்த உறுதியை இப்பாடலின் ஆசிரியரும் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

விழித்தெழுவேன் (இவா:5) என்கிற வார்த்தையைப் பற்றிச் சிந்திக் கிறபோது ஆண்டவரின் உதவி அருளப்படும்புதிய நாளைக்குறித்து ஆசிரியர் பேசுவதாகப் புரிந்து கொள்ளலாம் இப்பாடலின் தொடக்க வரிகளில் (இவா 2-3) தோன்றிய எதிரிகள் அச்சம் அகன்ற நிலையில் இருக்கும் ஆசிரியர் முன்பாக மீண்டும் தோன்றுகின்றனர் (இவா: 7) தொடக்கத்தில் எதிரிகள் தங்கள் வாய் வார்த்தையால் ஆசிரியரைத் தூற்றினர்; ஆனால் இப்போது அவர்களின் கன்னத்தையும் பல்லையும் அடித்து நொறுக்கி ஆண்டவர் அவர்களுக்குப் பாடம் கற்பிப்பார் என்று ஆசிரியர் நம்புகிறார். தொடக்கத்தில் தன் துன்பங் களினால் ஆடிப்போயிருந்த ஆசிரியர், இறுதியில் அச்சம் நீங்கி , நம்பிக்கையுடன் நிமிர்ந்து நிற்கிறார். அச்சம் நீங்கிய நிலையில் அவர் நிமிர்ந்தபோது, தான் பெற்ற துன்பங்களையெல்லாம் மறந்தவராய், இயேசு எதிரிகளுக்காக மன்றாடியது போல, அவரும் மற்றவர்களுக்காகக் கடவுளிடம் ஆசீரை வேண்டுகின்றார். ஆண்டவர் அருளும் மீட்பு மிகவும் முக்கியமானது. மண்ணக எதிரிகளிடமிருந்து நாம் பெறும் பாதுகாப்பை விட கடவுள் அருளும் மீட்பு மிகவும் முக்கியமானது. தாங்க முடியாத வேதனையில் தவித்த நம் ஆண்டவர் இயேசு உரத்த குரல் எழுப்பி, கண்ணீர் சிந்தி, மன்றாடி வேண்டினார். ( எபி 5:7). அவரது செபம் விண்ணகத் தந்தையால் ஏற்கப்பட்டக் காரணத்தினால், தான் பெற்ற அவமானச் சாவுக்குப் பின், மகிமையுடன் அவர் உயிர் பெற்றெழுந்தார். இப்பாடலை நாம் இசைத்துப் பாடும்போது, நம்பிக்கையற்றச் சூழ்நிலையிலிருந்து நாம் விடுபட்டு, இறைவனில் முழு நம்பிக்கையைப் பெற்று மகிழமுடியும்.

# தெரிந்து கொள்ளுங்கள்



1. மனிதனின் அறிவியல் பெயர் - ஹோமோசெப்பியன்ஸ்
2. மூட்டைப்பூச்சியின் ஆயுட்காலம் - 6 மாதங்கள்
3. சுவாசிக்காமல் வாழும் உயிரினம் - ஈஸ்ட்
4. மரம் ஏறும் மீனினத்தின பெயர் - அனபாஸ்
5. மகரந்தசேர்க்கைக்கு உதவும் உயிரினம் - வண்ணத்துப்பூச்சி
6. கரப்பான்பூச்சியின் இரத்தத்தின் நிறம் - வெள்ளை
7. தேனி கொட்டும்பொழுது நம் உடலில் செலுத்தப்படும் அமிலம் - பார்மிக் அமிலம்



– **R.ஜெசிகா ரெஜூலின்,** வெள்ளக்கோவில்

# புனிதம் மனிதனில்

எந்த ஒரு மனிதனும் தன்னுடைய பிறப்பினால் உயர்வடைவதில்லை! மாறாக அசாதார மனிதர்களாக பிறக்கும் ஒவ்வொருவருக்கும், தங்களுடைய உள்ளத் தூய்மையாலும் உடல் தூய்மையாலும், பிறருக்கு எடுத்துக்காட்டாக வாழும் வாழ்க்கையினால் தான் உயர்வடைகிறார்கள்.

புனிதர்கள் என்றால் யார்?

நம் தாய் திருச்சபை நவம்பர் திங்கள் முதல் நாளை அனைத்து புனிதர்களின் திருநாளாக அனுசரித்து வருகிறது. இந்த புனிதர்கள் என்பவர்கள் யார்? உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள் (மாற்கு 16:15) என்ற ஆண்டவர் இயேசுவின் போதனையின்படி, மீட்பின் நற்செய்தியை பறைசாற்ற, தங்களுடைய உறவுகளையும், உடைமைகளையும் துறந்து, பணியாற்றி அதனால் துன்புறுத்தப்பட்டு மடிந்த பின்னும் புகழோடு வாழ்பவர்களை புனிதர்கள் என்கிறோம். என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றி இல்லாதவை, பொல்லாதவைகளை எல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்களே! மகிழ்ந்து பெருமை கொள்ளுங்கள், ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்கு கிடைக்கும் கைமாறு மிகுதியாகும். மத். 5:11–12 ஆம். இயேசு கிறிஸ்துவுக்காக தூய வாழ்க்கை வாழ்ந்து, தங்கள் இன்னுயிரையும் துறந்தவர்களுக்கு, இறைவன் தரும் கைமாறு புனிதர்கள் என்னும் சிறப்புப்பேறு.

புனிதர்களின் குணநலன்கள்:

இவ்வாறு புனிதர்கள் ஆகும்போது பேறுபெற்றவர்கள் தூய ஆவியின் கனிகளால் நிரப்பப்பெற்றிருப்பர். திருவருட்சாதனங்களின் மேல் ஆழ்ந்த பற்றுகொண்டு அதனை முறையாக கடைபிடித்து, வாரம்தோறும் பாவசங்கீர்த்தனம் செய்து, திவ்ய நற்கருணை உட்கொள்பவர்களாகவும் திகழ்வார்கள். இதனால் அவர்களின் ஆன்மா புனிதமாகவே காணப்படும்.


இப்படி புனிதமாக வாழ்பவர்களின் உடல் அழியாத் தன்மை பெற்றிருப்பதோடு, அவர்களின் கல்லறைகளில் அதிசயமும் நடைபெறுகின்றன. கோவாவில் உள்ள தூய பிரான்சிஸ் சவேரியாரின் உடல் அழியா தன்மை பெற்றிருப்பதும், கேரளாவில் உள்ள தூய அல்போன்ஸா–வின் கல்லறையில் அதிசயங்கள் நடைபெறுவதும் இதற்கு நற்சான்றாகும்.

முதல் புனிதர் அன்னை மரியாள்:

கத்தோலிக்க திருச்சபையில் காணப்படும் அனைத்து புனிதர்களுக்கும் மேலான புனிதர் நம் தாய் தூய கன்னி மரியாள், ஆம்! தந்தையாம் இறைவனின் அருளை ஏகபோகமாக பெற்று தூய ஆவியின் வல்லமையால் இறைவனின் மகனையே ஈன்றெடுத்த முதல் புனிதர் ஆனவர் அன்னை மரியாள். புனிதர்களுக்கான அத்தனை குணங்களையும் ஒருங்கே பெற்று, தூய ஆன்மாவோடு உயிருடன் விண்ணுக்கு எழுப்பப்பட்டதால், அன்னை மரியாளுக்கு புனிதர்களின் ஆசி என்ற சிறப்பும் உண்டு.

அருவித் தண்ணீர் அழகாய் விழும் ஆனால் குவளைத் தண்ணீரே தாகம் தீர்க்கும்! நம் வாழ்வும் பிறர் தாகம் தீர்க்கும் குவளைத் தண்ணீராய் அமைந்திட, புனிதர் பாதம் பணிந்து அவர்கள் வழிநின்று வாழ்வோம் நாமும் புனிதராகலாம்,. புனிதம் மனிதனில் என்றே மெய்ப்பிப்போம். – **M.மிக்கேல் உஷா,** பொற்பை

# மனிதருள் மாணிக்கம்



'ரோஜாவின் ராஜா' என்றும் 'மனிதரில் மாணிக்கம்' என்றும் அன்புடன் அழைக்கப்படுபவர் பண்டித ஜவஹர்லால் நேரு ஆவார். இவர் குழந்தையைப் போல் சுறுசுறுப்பும், மலர்ந்த முகமும், சமாதான உள்ளமும் கொண்டவர். இவர் தமது முதுமைப் பருவத்திலும் இளங்குழந்தைகளோடு சேர்ந்து ஓடியாடி விளையாடி மகிழ்ந்தவர். எனவே குழந்தைகள் இவரை நேரு மாமா என்று செல்லமாக அழைத்தார்கள். இதனால் இவரது பிறந்த நாளான நவம்பர் 14-ம் நாள் அன்று குழந்தைகளைத் தம் இல்லத்திற்கு வரவழைத்து அவர்களோடு விளையாடி மகிழ்வார். எனவே நேருவின் பிறந்த நாள் குழந்தைகள் தின விழாவாக இன்றும் கொண்டாடப்பட்டு வருகிறது.

குழந்தைகளிடம் மட்டும் அன்பு கொண்டவராக மட்டும் அவர் இருக்க வில்லை. நாட்டுப் பற்றும், தியாக உள்ளமும், அனைவரிடமும் சமாதானமாக வாழ வேண்டும் என்ற உயர்ந்த பண்பை கொண்டவராகவும் விளங்கினார். நேருவைப் பொறுத்தவரையில் அவர் உலக சமாதானத்தையே விரும்பினார். அதற்காகவே பாடு பட்டார். உலக சமாதானத்திற்காகவே பல நாடுகளுக்கும் சென்று உரை நிகழ்த்தினார்.

நேரு அவர்கள் எழுதிய 'டிஸ்கவரி ஆஃப் இந்தியா' என்ற நூலில் ஒரு நாட்டின் உள் விவகாரங்களில் பிற நாடுகள் தலையிடாமல் இருக்கவேண்டும். சமத்துவத்தைப் பாதுகாக்க வேண்டும், சமாதானம் மற்றும் சுமூகமான வாழ்க்கையை கடைபிடிக்க வேண்டும் எனத் தீர்மானங்கள் எழுதப்பட்டிருந்தன. இவ்வாறு அவர் உலக அமைதியே தனது வாழ்வு என விரும்பினார்.

மேலும் இந்திய திருநாட்டின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டு விளங்கினார். இந்தியாவின் வளர்ச்சி, உணவு, விவசாயம், தொழில் ஆகியவையே என்று உணர்ந்த நேரு அவர்கள் அவற்றில் அதிக கவனம் செலுத்த தொடங்கினார். பொருளாதார சீரமைப்பபை உருவாக்கும் வகையில் ரிசர்வ் வங்கியை அரசுடைமையாக்கிய பெருமை நேருவையே சாரும். நாட்டின் முன்னேற்றத்திற்காக ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்து நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் சென்றார்.

எனவே நேருவின் பிறந்தநாளைக் கொண்டாடும் நாம் ஒவ்வொருவரும் அவரிடம் காணப்பட்ட குழந்தைகள் அன்பு, உலக சமாதானம், நாட்டின் வளர்ச்சியில் அக்கறை போன்ற பண்புகளை கடைபிடிதது வாழவேண்டும். அவ்வாறு வாழ்ந்தால் நாமும் 'மனிதருள் மாணிக்கம்' ஆகலாம். – **R.மரியா சந்திரா,** ஆசிரியை,

## நேருவின் பொன்மொழிகள்

வெறுப்போடும் விரக்தியோடும் ஒன்றில் ஈடுபடுவதால் நமது சிந்தனையும் சக்தியும் விரயமாகிவிடும்.

அதிகப்படியாகக் கற்பனை செய்வதும் நல்லதல்ல கற்பனையே இல்லாமல் இருப்பதும் நல்லதல்ல!

குழந்தைகள் மனித குலத்தின் நம்பிக்கை!

சட்டத்தால் சாதிக்க முடியாதவற்றைக்கூட நல்லெண்ணத்தால் சாதிக்கலாம்.

அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி ஏற்பட்டாலும் அசையாத தன்மையுடையதே நம்பிக்கை.

சரியான கல்விமுறையினால்தான் உண்மையான கட்டுப்பாடான சமூகத்தை உருவாக்க முடியும்.

**-டே. நிஜிதா,** வெள்ளக்கோவில்

# ஆத்துமாக்கள் தினம்

ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் இரண்டாம் தேதியை ஆத்துமாக்கள் தினமாக உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. வெளி நாடுகளில் வாழும் கிறிஸ்தவர்கள் கூட **All Souls' Day** என்று கடைபிடிக்கும் இந்த நாளில் அனைவரும் கல்லறைகளுக்குச் சென்று இறந்துபோன தங்கள் உறவினர்களின் சமாதியை அழகுபடுத்தி அதன் முன்நின்று செபிப்பதை, அவர்களுக்காக இறைவனிடம் மன்றாடுவதை வழக்கமாக கொண்டிருப்பார்கள்.

நவம்பர் 2ம் தேதியன்று இறந்தவர்கள் அனைவரையும் நாம் நினைக்கின்றோம். நம் அன்னையாகிய திருச்சபை, மோட்சத்திலிருக்கும் தன் மக்களை நினைத்தபின் வேதனைப்படும் தன் மக்களை நினைக்கிறது. அவர்களுக்காக தன்னாலான உதவி செய்ய முயற்சிக்கிறது. மோட்சத்தில் வாழும் தன் மக்களுடன் அவர்களை சீக்கிரம் ஒன்றிணைக்கும்படி மன்றாடுகிறது.

இயேசுவை நேசிக்கிறவன் உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு ஏராளமாக உதவி செய்வான். ஏனெனில் அவர்கள் இயேசுவின் சகோதரர்கள். சிறையிலிருக்கும் சகோதரர்கள், மோட்ச மகிமை என்னும் ஆடையின்றித் தவிக்கும் சகோதரர்கள் அவர்களுக்கு உதவி செய்யும்போது நாம் இயேசுவுக்கு உதவி செய்கிறோம்.அவர் நம்மிடம் இன்னும் உதவி கேட்டு வருகிறார். உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு உதவி செய்து அவர்களை மோட்ச இராஜ்ஜியத்திற்கு அனுப்புகிறோம். இனி அவர்களுக்கு எவ்வித தேவையும் கிடையாது. அவர்கள் கடவுளை வாழ்த்துவார்கள். நன்றி மறப்பது மோட்சத்தில் கிடையாது.




எனவே இந்த நாளில் நாமும் கல்லறைகளுக்குச் சென்று இறந்துபோன நமது உறவினர்களின் ஆத்துமத்திற்காக செபிப்பது போல யாரும் நினையாத ஆத்துமாக்களுக்காகவும் செபிப்போம். அனைத்து ஆத்துமாக்களும் மோட்ச இராஜ்ஜியம் சேர இறைவனிடம் மன்றாடுவோம்.

**-பிரபா,** பொற்பை

# ஆன்மாக்களோடு புனித பியோ

– அருட்திரு.பொற்பை **போஸ்**



புனிதர் பியோ

ஐந்து காய வரம்பெற்றவரான புனித பியோ மே மாதம் 1922 ம் ஆண்டு மெல்பி மறைமாவட்டத்தின் ஆயரான ஆல்பர்டோ கோஸ்தா மற்றும் அவரது சபை அதிபரான அருட்திரு லொரன்சோ மற்றும் ஐந்துபேர் முன்னிலையில் தனது அனுபவத்தை வெளிப்படுத்தினார். அவர்களுள் ஒருவர்தான் அல்பர்டோ அப்போலிட்டோ. அவரதுகுறிப்புகள்தான் கீழ்கண்டவை:

குளிர்கால நேரம்; பலத்தப் பனிப்பொழிவிற்குப் பின்னர் மிகக்குளிராக இருக்கிறது. எனவே தந்தை பியோ அவர்கள் பார்வையாளர் அறையில் அமைக்கப்பட்டுள்ள வெப்பம் தரும் அடுப்பருகில் ஜெபத்தில் ஆழ்ந்திருக்கிறார். அப்போது ஒரு வயோதிகர் அவரருகில் வந்தமர்கிறார். அவர் அணிந்திருந்த ஆடை இத்தாலியன் தென்பகுதி குடியானவர்கள் அணிந்திருக்கும் உடையை ஒத்திருக்கிறது. அது ஒரு மிகப்பழமையான அங்கி.

அந்த மனிதரின் வருகையை தந்தை பியோ அவர்களால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால், அது இரவு நேரம். அனைத்து கதவுகளும் மூடப்பட்டுள்ளன. எனவே அவர், நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்? என்று வினவுகிறார்.

அந்த முதியவர் பேச ஆரம்பித்தார். ஃபாதர் பியோ, என் பெயர் பீற்றர் தி மோரோ. பிரகோக்கோ என்ற பட்டப்பெயரில் அழைக்கப்பட்ட நிக்கோலா என்பவரின் மகன். நான் செப்டம்பர் மாதம் 18 ம் தேதி 1908 ம் ஆண்டில் இதே குருக்கள் மடத்தில் 4ம் எண் அறையில் மரித்தேன். அப்போது இது ஏழை இல்லமாக இருந்தது. நான் ஒரு சிகாரை பற்றவைத்துக் கொண்டே படுக்கையில் தூங்கிவிட்டேன். நான் பற்ற வைத்திருந்த சிகார் படுக்கையில் தீ மூட்டவே அது பற்றி எரிந்து அதனில் நானும் எரிந்து மூச்சு திணறி இறந்துவிட்டேன். இன்னும் நான் உத்தரிக்கிற ஸ்தலத்தில்தான் இருக்கிறேன்.

அதிலிருந்து விடுதலையடைய எனக்கு ஒரு திருப்பலி தேவைப்படுகிறது. கடவுளின் அனுமதியின் பேரில் உங்களிடம் உதவி கேட்டு வந்துள்ளேன்.

இவ்வார்த்தைகளைக் கேட்டபின்னர் ஃபாதர் பியோ அந்த முதியவரிடம் உங்களுக்கு ஓய்வு கிடைத்துவிட்டது. நாளை உங்களுடைய விடுதலைக்காக நான் திருப்பலி ஒப்புக்கொடுக்கிறேன் என்று கூறி வந்தவரை வழியனுப்ப வாசல் பக்கம் செல்கிறார் தந்தை பியோ. பூட்டப்பட்டிருந்த வாசலை திறந்து அவரை வழியனுப்புகிறார். வெளி முற்றத்தில் நிலவொளி பிரகாசமாக இருக்கிறது. எங்கும் பனிப்பொழிவு படர்ந்துள்ளது.

வாசலைவிட்டு வெளியே சென்ற அந்த முதியவரை காணமுடியவில்லை. தந்தை ஃபியோ அதிர்ந்து போகிறார். கதவுகளை மூடிவிட்டு மீண்டும் பார்வையாளர் அதற்குள் நுழைகிறார். மயங்கிய நிலையில் இருக்கிறார்.

சிலதினங்கள் கழித்து தந்தை பியோ அதனை தந்தை பவுலினோவிற்கு சொல்ல இருவரும் இறந்தோரைப் பற்றிய குறிப்புகளைக் கொண்டுள்ள இடத்திற்குச் செல்கின்றனர். அங்கே அந்த முதியவர் குறிப்பிட்டபடியே அவரது இறப்பு பதிவாகியுள்ளது. அந்நாளில் அந்த குருக்கள் மடத்தில் உள்ள அறை எண் 4 இல்லமற்றோருக்கு இல்லமாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது என்ற குறிப்பும் இருந்திருக்கிறது. (தொடர்ச்சி 10ம் பக்கம்)

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639-261230 , 261330, 261430**

**04-10-2014 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | - | 1048 பேர் |
| குழந்தைபாக்கியம் | - | 1107 பேர் |
| சுகப்பிரசவம் | - | 987பேர் |
| நற்சுகம்பெற | - | 1575 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | - | 795 பேர் |
| தேவஅழைத்தல் | - | 524 பேர் |
| வேலைகிடைக்க | - | 1749 பேர் |
| தொழில்முன்னேற்றம் | - | 1423 பேர் |
| குடும்பசமாதானம் | - | 975 பேர் |
| குடும்பநலன் | - | 642 பேர் |
| உறவினர்நன்மைக்காக | - | 575 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | - | 625 பேர் |
| அலகைதொல்லைதீர | - | 1245 பேர் |
| மனஅமைதிக்காக | - | 1675 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | - | 743 பேர் |
| மனமாற்றமடைய | - | 845 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | - | 1927 பேர் |
| நல்லஇல்லம்அமைய | - | 963 பேர் |
| சோதனைகளைவெல்ல | - | 894 பேர் |
| கடன்தொல்லைதீர | - | 2308 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | - | 897 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.** - பங்குத்தந்தை

**உங்கள் ஜெப உதவிக்கு எங்கள் இணையதள முகவரி**

**kalyanamatha@gmail.com**

இந்நேரத்தில் தந்தை பியோ அல்பர்டோவிடம் இன்னொரு நிகழ்ச்சியையும் கூறியிருக்கிறார்.

ஒரு மாலை நேரத்திலே சிற்றாலத்தில் நான் ஜெபத்தில் மூழ்கியிருந்தபோது காலடிசப்தம் கேட்டு திடுக்கிட்டெழுந்தேன். பிரதான பீடத்தைப் பார்த்தபோது மெழுகுவத்திகளும் பூச்சாடிகளும் இங்குமங்கும் இடம் பெயர்ந்து கொண்டிருந்தன. யாரோ ஒருவர் அங்கு இருக்கிறார் என்று நினைத்துக்கொண்டு யாரது? என்ற குரலெழுப்பினேன்.


பதிலேதும் இல்லாததால் மீண்டும் ஜெபத்தில் ஈடுபட்டேன்.அதே சந்தடியை மீண்டும் கேட்டேன். இப்போது இரக்கத்தின் மாதாவின் சுருபத்தின் முன்னால் வைக்கப்பட்டிருந்த மெழுகுவர்த்தி கீழே விழுந்துள்ளது என்று புரிந்துக் கொண்டேன்.

# முதல் சனி வழிபாடு

திருக்கல்யாணத் தாய் திருத்தலத்தில் அக்டோபர் மாத முதல் சனி வழிபாடு நிகழ்வுகள் 04.10.2014 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை நற்கருணை ஆராதனை வழிபாடு நடைபெற்றது. 10.00 மணி முதல் 11.00 மணி வரை மலையாளத்தில் திருப்பலி நடைபெற்றது. 11.00 மணிக்கு தமிழிலும் மலையாளத்திலும் ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு அன்னையின் புகழ் பாக்கள் பாடிக்கொண்டு ஆலயத்தைச் சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது.

அதன்பின் நவநாள் ஜெபம் விண்ணப்பங்கள் ஒப்புக் கொடுத்தல் திருப்பலி கருத்துக்கள் ஒப்புக்கொடுத்தல் நடைபெற்றது. 12.00 மணிக்கு 10 குருக்கள் இணைந்து நவநாள் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது.

வருகை தந்திருந்த அனைவருக்கும் காலையில் பொங்கல் அதன்பின் குளிர்பானம், குழந்தைகளுக்கு பாலும், திருப்பலி நிறைவு பெற்ற பின் திருத்தலத்தின் சார்பாக மதிய உணவும் வழங்கப்பட்டது. அதன் பின் மாலை 4.00 மணிக்கும் 6.30 மணிக்கும் பக்தர்களுக்கு சிறப்புத் திருப்பலி நடைபெற்றது.



# இறை நம்பிக்கையின் மகத்துவம்

விண்வெளி ஆராய்ச்சியில் அமெரிக்காவும் ரஷ்யாவும் போட்டிபோட்டுக்கொண்டிருந்த காலம். அமெரிக்காவின் விண்வெளி வீரர்கள் இறை நம்பிக்கை கொண்டவர்களாக தம் முயற்சியில் தொடர்ந்தார்கள்.ரஷ்ய விண்வெள் வீரர்களோ தம் பொது உடைமை கருத்துக்களில் மூழ்கி இறைவன் இல்லை என நிரூபிக்க விண்வெளி ஆய்வுகளை பயன்படுத்தினர்.

இருப்பினும் முதன் முதலில் விண்வெளிக்குச் சென்றவர் ரஷ்ய விண்வெளி வீரர் யூரிகாகரின் என்பவர்தான். அவர் விண்வெளியிலிருந்து பூமிக்கு முதலாவது அனுப்பிய செய்தி விண்வெளியில் நான் எந்த கடவுளையும் காணவில்லை ( I find no God here ) என்று தொடங்குகிறது. தமது திறமையை மட்டும் நம்பி இறை நம்பிக்கையை கைவிட்ட ரஷ்யர்களின் விண்வெளி ஆராய்ச்சி குறுகிவிட்டது.ரஷ்யா,பல சிறு நாடுகளாக சிதறிவிட்டது.

ஆனால் இறை நம்பிக்கையில் ஆழ்ந்து முயன்ற அமெரிக்கர்களோ நிலவிலும் கால்பதித்தனர். முதன்முதலில் நிலவில் கால்பதித்த நீல் ஆர்ம்ஸ்ட்ராங் என்பவர் தமது செய்தியில் விண்வெளி எங்கும் இறைவனின் வல்ல செயல்களைப் பார்க்கிறேன் என்ற வார்த்தைகளுடன் தொடர்கிறார். அமெரிக்க விண்வெளி வீரர்களின் இறைநம்பிக்கையே அவர்கள் இன்றும் விண்வெளி ஆய்வில் முதலிடமாகத் திகழ வழி வகுக்கிறது. ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே அறிவின் தொடக்கம் என்ற விவிலிய வாக்கு என்றும் பொய்யாகாது.

– த. பீட்டர் அந்தோணி ராஜ்

# திருச்சபைச் செய்திகள்

அருட்திரு. முனைவர் R.ஜோசப் ரவி பாலன்

## அகில உலக ஆயர்ப் பேரவையின் 14வது கூட்டம்



அகில உலக ஆயர்ப் பேரவையின் 14வது கூட்டம் வத்திக்கான் நகரில் அக்டோபர் 5முதல் 19வரை நடைபெற்றது. இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத் திற்குப்பின் (1962-65) அகில உலக ஆயர்ப்பேரவையின் கூட்டம் ஏதாவது ஒரு மையப்பொருளை விவாதிப்பதற்காக நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது. அகில உலக ஆயர்ப் பேரவையின் தலைமைச் செயலகம் உரோமையில் இருக்கிறது. தேவைக்கேற்ப இடையிடையே சிறப்புக் கூட்டமும் நடத்தப்படுகிறது. அந்த வகையில் சென்ற மாதம் நடைபெற்றது, மூன்றாவது சிறப்புக்கூட்டம். இந்தக் கூட்டத்தின் கருப்பொருள் நற்செய்தியை அறிவிக்கும் பணியில் குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் இந்த சிறப்புக் கூட்டத்தில் உலகிலுள்ள அனைத்து நாடுகளிலிருந்து 253 பேர் கலந்து கொண்டனர். இவர்களில் 14 பேர் திருமணத் தம்பதியர்கள். திருத்தந்தை பிரான்சிஸின் அழைப்பின் பேரில் இந்தத் தம்பதியர்கள் கலந்துகொண்டனர். அக்டோபர் 5 ஆம் நாள் காலை பத்து மணிக்கு திருத்தந்தை திருப்பலி நிகழ்த்தி இந்த சிறப்புக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

## நியூமனுடன் ஒரு நாள்:

முத்திப்பேறு பெற்ற கர்தினால் நியூமன் (முழுப்பெயர் : ஜான் ஹென்றி நியூமன்) புனிதப் பட்டம் பெறவேண்டும் என்கிற கருத்தினை மையப்படுத்தி, இங்கிலாந்திலுள்ள பர்மிங்காம் நகரத்தில் நியூமனுடன் ஒரு நாள் என்கிற ஒரு நிகழ்வு அக்டோபர் 11 ஆம் நாள் நடைபெற்றது. இந்த நிகழ்வு பகல் 12 மணிக்கு திருப்பலியுடன் தொடங்கியது. பர்மிங்காம் மறைமாவட்டத்தின் துணை ஆயர் மேதகு ராபர்ட் பைர்ன் திருப்பலியை தலைமை ஏற்று நடத்தினார். கர்தினால் நியூமன் பற்றி பலரும் பேசினார்கள். அவர் விரைவில் புனிதராகத் திருச்சபையால் அறிவிக்கப்பட வேண்டுமென்று கூடியிருந்தவர்கள் ஜெபித்தார்கள். கர்தினால் நியூமனுக்கு பர்மிங்காமில் 2010ம் ஆண்டு செப்டம்பர் 19ம் நாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களால் முத்திப்பேறு பட்டம் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.இந்த செப நாள் மிகச் சிறப்புடன் வெற்றியடைய திருத்தந்தை பிரான்சிங் தம் வாழ்த்துகளை அனுப்பியதோடு,நியுமனின் புனிதப் பட்டத்திற்காக தான் செபிப்பதாகவும் செய்தி அனுப்பினார்.



கர்தினால் நியுமன்

யார் இந்த கர்தினால் நியூமன்? திருச்சபையின் வரலாறு இதுவரை கண்டிருக்கின்ற மாபெரும் மனமாற்றங்களுள் கர்தினால் நியூமனின் மனமாற்றமும் ஒன்று என்று சொன்னால் [illegible] ஆம் நூற்றாண்டு சமய வரலாற்றில் இவர் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளார் என்கிற கருத்தை யாரும்

எதிர்க்கமாட்டார். 1801 ஆம் ஆண்டில் பிப்பரவரி 21 ம் நாள் பிறந்து 1890 ம் ஆண்டில் ஆகஸ்ட் 11ம் நாள் இவர் இயற்கை எய்தினார்.1825 ஆம் ஆண்டில் ஆங்கிலிக்கண் திருச்சபையில் குருவாக மாறினார்.மிகப் பெரிய அறிஞராகிய இவர் கத்தோலிக்க விசுவாசத்தின் மீது மிகுந்த ஈர்ப்புக் கொண்டார். 1847 ஆம் ஆண்டு திருச்சபையில் இவர் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1879 ஆம் ஆண்டு திருத்தந்தை 13 ஆம் சிங்கராயரால் கர்தினால் என்கிற நிலைக்கு உயர்த்தப்பட்டார். இவரது பக்தியும் ,கத்தோலிக்கத் திருச்சபையின் போதனை மற்றும் விசுவாசத்தின் மீது இவர் கொண்டிருந்த தாகமும் எல்லாரும் அறிந்ததே.மேலும் இவர் ஒரு தலை சிறந்த எழுத்தாளர். இவரது எழுத்துகள் மிகவும் பாராட்டப்படுவதோடு, ஆய்வுகளுக்காகவும் அவை எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

## சிரியாவில் கிறிஸ்தவர்கள் படும் பாடு



தாக்குதலுக்குள்ளான தேவாலயம்

திருச்சபையின் தொடக்கக் காலத்தில் சிரியாவில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் எவ்வளவு சிறப்புடன் வாழ்ந்தார்கள் என்பதைக் குறித்து திருத்தூதர் பணிகள் நூலில் பார்க்க முடிகிறது. புனித பவுலின் மூன்று தூதுரைப் பயணங்களும் சிரியா திருச்சபையின் ஆதரவுடன் நடைபெற்றது என்பதற்கு மாற்றுக் கருத்து கிடையாது. அந்த சிரியா நாட்டின் இன்றைய நிலை வேறு இந்நாட்டின் வடக்கிலிலுள்ள 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட அலெப்போ என்கிற மாநகரத்தில் மூன்றாண்டு கால உள்நாட்டுப் போரின் காரணமாக பெரும் துன்பத்திற்கு ஆளாகியுள்ள கிறிஸ்தவர்கள் படும் வேதனையை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. சிரியாவில் ஏற்படுகின்ற தொடர் கலவரங்கள் வன்முறை சம்பவங்களின் காரணமாக பலர் உயிரிழந்துள்ளனர். பலரின் சுதந்திரமும் உரிமைகளும் பறிக்கப்பட்டுள்ளன. வறுமை தாண்டவமாடுகிறது. மேலும் தண்ணீர் மற்றும் மின்சாரம் போன்ற அடிப்படை வசதியின்றி பல கிறிஸ்தவர்கள் அல்லலுறுகின்றனர் என்று அங்கு சமூக சேவை புரியும் மரியா என்கிற ஒரு அருட்சகோதரி கூறியிருக்கிறார்.

கடந்த பிப்ரவரி மாதத்தில் நான்காம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மாதா கோவில் ஒன்றிற்குள் ஆயுதங்களை ஏந்திய ஒரு கும்பல் நுழைந்து பெரும் சேதத்தை விளைவித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. அந்தக் கோவிலில் உள்ள சிலுவையை அடித்து நொறுக்கி சுரூபங்களை தூக்கி எறிந்து உடைத்து விவிலிய நூலின் பக்கங்களை கிழித்து பீடத்திற்கு தீ வைத்துக் கொளுத்திச் சென்றதாக கூறப்படுகிறது. கலவரக்காரர்கள் மட்டுமின்றி இராணுவ வீரர்களும் கோவிலுக்குள் புகுந்து தங்களது வெறித்தனத்தைக் காட்டியுள்ளனர்.

## அமைதிக்கான நோபல் பரிசு.



கைலாஷ் சத்தியார்த்தி

இந்த ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு இரண்டு பேருக்கு வழங்கப்பட உள்ளது. பாகிஸ்தானைச் சேர்ந்த குழந்தைகளின் கல்விக்காக போராடிய மலாலா யூசுஃப்ஸை என்கிற பதினேழு வயது இளம்பெண்ணும் இந்தியாவில் குழந்தைகளின் உரிமைக்காக போராடும் கைலாஷ் சத்தியார்த்தி என்பவரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். பரிசு பெறுபவர்களின் பெயர்கள் அறிவிக்கப்படுவதற்கு முன் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பெயர் முன்னனியில் இருந்தது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் சூதாட்டக்காரர்களின் கணிப்பிலும்கூட திருத்தந்தைதான் வெற்றி பெறுவார் என்கிற நம்பிக்கை இருந்ததாக அறிகிறோம். 2001ம் ஆண்டில் குன்னர் ஸ்டால்சேத்து என்கிற நோபல் பரிசு அளிக்கும் குழுவின் உறுப்பினர் ஒருவர் கருத்தடையை பற்றிய திருச்சபையின் படிப்பினை மாறினாலன்றி எந்த பாப்பரசருக்கும் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படமாட்டாது என்று கூறியதை நினைவில் கொள்ளலாம்.



மலாலா யூசுஃப்

இது வரை அமைதிக்காக பரிசு பெற்றவர்களின் மலாலா தான் மிகவும் இளையவள் என்பது குறிப்பிடத்தக்கது. 2012ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இளம்பெண்களின் கல்வியின் அவசியத்தைப் பற்றி பாகிஸ்தானில் மலாலா பிரச்சாரம் செய்த போது துப்பாக்கி ஏந்திய தலீபான் படையினர் ஈவு இரக்கமின்றி அவர் தலையில் சுட்டனர். மிகவும் ஆபத்தான நிலையிலிருந்த மலாலா மருத்துவர்களால் காப்பாற்றப்பட்டு தற்போது இங்கிலாந்தில் பர்மிங்ஹாம் நகரில் வாழ்ந்து வருகிறாள்.

## பிலிப்பைன்ஸ் ஆயர்களின் கூட்டறிக்கை

அக்டோபர் 4ஆம் நாள் புனித பிரான்சிஸ் அசிசியாரின் திருவிழாவன்று பிலிப்பைன்ஸ் நாட்டின் கத்தோலிக்க ஆயர்கள் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டனர். பிலிப்பைன்ஸ் நாட்டு கத்தோலிக்க ஆயர்களின் கூட்டமைப்பின் சார்பாக அதன் தலைவர் லிங்காயன் டாகுப்பன் என்கிற மறைமாவட்டத்தின் பேராயர் சாக்ரடீஸ் வில்லேகஸ் கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கையில் சுற்றுச் சூழலை பாதுகாப்பது பற்றியும் தட்பவெப்ப நிலை மாற்றம் குறித்தும் கருத்து தெரிவித்துள்ளார். ஒவ்வொருவரும் கடவுளின் படைப்பை எந்த அளவு பாதுகாக்க முடியும் என்பது குறித்து ஆன்ம பரிசோதனை செய்து பார்ப்பது மிகமிக அவசியம் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

**உடல் உறுப்புகள் தானம்**

இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கத்தோலிக்க ஆயர்களின் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் இரத்த தானமும், உடல் உறுப்புகள் தானமும் மிகவும் அவசியம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. உடல் உறுப்புகளையும், இரத்தையும் தானம் செய்வதின் மூலம் வாழ்வின் கலாச்சாரம் பரவிட உதவ முடியும் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

சென்ற மாத தொடர்ச்சி...



# ஞானம் நிறைந்த பாத்திரமே

அருட்திரு. **ஜோசப் ஸ்டார்லின்**

இந்த ஞானத்தின் இயல்பும் மேன்மையும் அன்னை மரியின் ஞானப்பாத்திரத்தில் இருப்பதை நாம் அறியலாம். அன்னை மரியின் ஆற்றலும் அறிவும் நல்லது எது தீயது எது என பகுத்தறிந்து தீமையை தள்ளவும் நன்மையைக் கொள்ளவும் வழி வகுப்பதாகும்.அவரது உள்ளம் எப்போதும் கடவுளைப் பற்றியே சிந்தித்து அவர் விரும்புவதைச் செய்து ஏழை எளிய மக்களை நன்மைகளால் மகிழ்விப்பதாகும். அவரின் தூய்மை நிறை உள்ளம் கூர்மை நிறை செயலில் வெளிப்பட்டது. ஒளிவிடும் முத்துக்கள் ஒன்றாகக் கோர்த்து முத்தாரம் செய்வது போல ஞானத்தின் மேன்மையையும் இயல்பையும் ஒன்றாக இணைத்து அன்னை மரியாவுக்குப் புகழ்பாடல் பாடி அவரைப் போற்றுவோம்.

**<u>ஞானம் – அன்பு ஆன்மாவுக்கும் தூய்மை ஆன்மாவுக்கும் கிடைத்த பரிசு</u>**

**வஞ்சனை நிறைந்த ஆன்மாவில் ஞானம் நுழைவதில்லை**
**பாவத்திற்கு அடிமையான உடலில் ஞானம் குடிகொள்வதில்லை (சா.ஞா.1:4)**

அன்னை மரியா பெற்ற ஞானம் கடவுளின் அன்பான கொடை ஆகும். மரியாவின் ஆன்மா வஞ்சனையோ, பழிவாங்கும் எண்ணமோ, பாவம் செய்யும் எண்ணமாகவோ இருந்திருக்க வாய்ப்பில்லை. மரியாவின் அன்பு நிறை தூய்மை உள்ளம், அவரைத் தேடி வருகின்ற பக்தர்கள் அனைவரையும் பாவ நிலையிலிருந்து மீட்டுக் காக்கின்றது.எதிரிகளையும் தமக்கு துன்பம் வருவிக்கும் மனிதர்களையும் அன்னை மரியா அன்பின் உள்ளத்தோடு பார்த்து வந்தார்.எனவே, கடவுள் அன்பு நிறை ஆன்மா கொண்ட மரியாவுக்கு ஞானத்தைப் பரிசாக்கினார்.

கடவுளின் பரிசான ஞானம் செய்யும் வேலை என்னவெனில் மனிதர்களைத் தீய செயல்களிலிருந்து பாதுகாப்பதும், இறைவனோடு உறவு கொண்டு, புது உருமாற்றம் கொண்டு வாழ்விக்கவும், பழைய வாழ்வை மாற்றிப் புதிய வாழ்வைப் புதுப்பித்து, இறைவனை நோக்கி வழி நடத்துவதுமாகும். மரியாவின் ஞானமும், அன்புள்ளமும், தூய ஆன்மாவும் கொண்ட அனைத்து பக்தருக்கும் பரிசாகக் கொடுக்கப்படுகிறது.

**<u>பேரறிவுள்ள ஞானம் – இறைப்பற்றுள்ளோருக்கான கடவுளின் ஆசிர்வாதம்.</u>**

**ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்**
**தூயவராகிய அவரைப் பற்றிய உணர்வே மெய்யுணர்வு (நீ.மொ.9:10).**

இறைப்பற்றுள்ளவர்களின் எண்ணமும் செயலும் ஆண்டவர் ஒருவரைப் பற்றியே இருக்கின்றது. ஞானம் மிகுந்தவர் பேரறிவும், பேராற்றலும், பேரன்பும் ஆழமான நம்பிக்கையும் கொண்டுள்ளவர்கள். அந்த ஞானம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை.கடவுளிடம் அச்சம் கொண்டு பாவம் செய்வதை விட்டுவிலகி

இறைப்பற்றுள்ள மனிதர்களிடம் அது கடவுளின் ஆசீர்வாதமாகக் கிடைக்கும்.

ஞானமுள்ளவர்களின் கண்கள் நல்லதைப் பார்க்கும் ஆர்வமும் உண்மையை வெளிப்படுத்தும் ஒளியாகவும் இருக்கும். அவர்களின் உணர்வுகள் தூய இறைவனின் அன்பை பற்றியும் கட்டளைகளைக் கடைப்பிடித்தல் பற்றியும் சரியானதை பற்றியும் இருக்கும். அன்னை மரியாவின் வாழ்வு இவ்வாறு ஞானம் நிறைந்த வாழ்க்கைக்கு சிறந்த சான்றாகும்.அன்னை மரியா நேர்மையின் மகளாக உண்மையில் பிறந்து உன்னத ஆண்டவரின் நிழலில் தவழ்ந்து உலகை அன்பில் ஆட்சி செய்து நீதியின் மீது பற்று கொண்டு, உள்ளத்தால் ஆண்டவரை நன்மனதுடன் நினைத்து உறுதியுடன் அவரைத் தேடுவதற்குக் காரணம் அவரது இறைப்பற்றே ஆகும். அதுவே கடவுளின் உன்னதமான உயர்வான கொடையான ஞானச்சுடரைப் பெற வழிவகுத்ததாகும். ஆண்டவரிடம் அச்சம் கொள்ளுதலே ஞானத்தின் ஆணிவேர் அதன் கிளைகள் நீடிய வாழ்நாட்கள் (சீராக்1:20).

இவ்வாறாக அன்னை மரியாவின் நிறை ஞானத்தை நாம் அறியலாம்.எளிமையான சிறியவரான அன்னை மரியாவைக் கடவுள் தேர்ந்தெடுத்து அவரை வல்லமை படைத்த ஞானத்தால் நிரப்பிய கடவுள் உண்மையில் உயர்ந்தவர். நாமும் இறைவனை நிதமும் தியானித்து அவரோடு நட்புறவு கொண்டு ஒவ்வொரு செயலிலும் இறைப்பிரசன்னத்தை உணரவே அன்னை மரியா நம் அனைவரையும் அழைக்கிறார். அப்போது நாமும் ஞானம் நிறைந்தவர்களாய் எல்லா இடமும் ஒளிவீசுவோம். இறைப்பற்றும், இறைஞானமும் இறைவன் தரவேண்டி ஞானம் நிறை அன்னை மரியாவிடம் செபிப்போம்.

# நிலை இல்லாத உலகம்

ஒருவன் உலகத்தையே தனதாக்கி கொண்டாலும் அவனது ஆன்மாவிற்கு கிடைக்கும் பயன் என்ன?. இவ்வுலகம் நமக்கு சொந்தமானதல்ல. மனிதன் வாழ்கிறது சில காலமே என நினைத்து வாழ்வது இல்லை. மரணம் முடிவுரை என முத்திரை பதிக்கின்றது. பிறப்பின் கடைசி கரைதான் மரணம். வாழ்வு நீர் குமிழியாகவே அமிழ்கிறது.மண்ணால் உண்டாக்கபட்ட சரீரம். மண்குழியே. புதைகுழி இடமாகிறது. வானக வாசலை திறந்திடும் வாயிலாகவும் அமைய பெறுகிறது. அருள் நிறை மரியே வாழ்க. ஜெபத்தில் எப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும் என ஜெபிக்கும் போதும் நம் ஆன்மா பலன் பெறுகிறது. பத்து மணிக்கு அடுத்து ஒ! என் இயேசுவே என்பாவங்களை மன்னியும் நித்திய நரக வேதனையிலிருந்து எங்களை காப்பாற்றும் என ஜெபிப்பதிலும் நம் ஆன்மா மிகவும் பலன் அடைகிறது. ஆன்மாவை ஜெபத்தினால் மட்டுமே நாம் காத்து கொள்ளமுடியும். இறை வார்த்தை வழியாக இறைவனின் அன்பை பெற்று ஆன்மாவை தளர விடாமல் காத்திடுவோம்.

வாழ்வின் வழியை நான் அறிய செய்வீர் உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு உமது வலது பக்கத்தில் எப்பொழுதும் பேரின்பம் உண்டு. (தி.பா. 16:11)ஆன்மீகத்தை வளர்ப்போம் ஆன்மாவை காப்போம்.

– **செல்வம்மாள்,** பொற்பை



# செக்காரியா-எலிசபெத்து குடும்பம்

**-ரா. பங்ராஸ்,** ஆசிரியர், பொற்பை.

யூதேய நாட்டில் ஏரோது அரசனாக இருந்த காலத்தில் அபியா வகுப்பைச் சேர்ந்த செக்கரியா என்னும் பெயர் கொண்ட குரு ஒருவர் இருந்தார். அவர் மனைவி ஆரோனின் வழிமரபாக வந்த எலிசபெத் ஆவாள். அவர்கள் இருவரும் கடவுளின் பார்வையில் நேர்மையானவராய் நடந்து அனைத்து கட்டளைகளையும் ஒழுங்குகளையும் காத்து குற்ற மற்றவர்களாய் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு பிள்ளை இல்லை. எனெனில் எலிசபெத் கருவுற இயலாதவளாய் இருந்தாள். மேலும் அவர்கள் இருவரும் வயது முதிர்ந்தவர்களாய் இருந்தார்கள். பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம் . (திரு: 127-3).

இத்தனை உத்தமாய் கடவுளை சேவித்தும் தாங்கள் விரும்பிய மக்கள்பேறு கிடைக்கவில்லையே என்று ஒருபோதும் விரக்தியோடும் , முறுமுறுப்போடும் இருக்காமல் மகிழ்சியாக செக்கரியா கடவுளின் திருமுன் குருத்துவப் பணி ஆற்றி வந்தார். தன்னுடைய பிரிவின் முறை வந்தபோது ஆண்டவரின் திருக்கோவிலுக்குள் சென்று தூபம் காட்டுவது யாரென்று சீட்டுகுலுக்கி போட அது செக்கரியா பெயருக்கு விழுந்தது. செக்கரியா தூபம் காட்டும் வேளையில் ஆண்டவருடைய தூதன் ஒருவர் தூப பீடத்தின் வலப்பக்கம் தோன்றினார்.

## வானதூதர் அறிவித்த நற்செய்சி:

செக்கரியா அஞ்சாதீர் . உமது மன்றாட்டு கேட்கப்பட்டது. உம் மனைவி எலிசபெத்து உமக்கு ஒரு மகனை பெற்றெடுப்பாள். அவருக்கு யோவான் என பெயரிடுவீர். அவரது பிறப்பால் பலரும் மகிழ்ச்சி அடைவர். ஆண்டவர் பார்வையில் பெரியவராய் இருப்பார். திராட்சை மதுவோ , வேறு எந்த மதுவோ அருந்தமாட்டார். தாய் வயிற்றில் இருக்கும் போது தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்படுவார். அவர் இஸ்ரயேல் மக்களுள் பலரை தம் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வரச் செய்வார். அவர் எலியாவின் ஆவியும் , பலமும் உடையவராய் இருப்பார்.

## நம்பிக்கை இல்லாததால் பேச்சற்றவராய் நின்ற செக்கரியா

செக்கரியா தனக்கு ஒரு குழந்தை பிறக்க வேண்டும் என்று பல நாட்கள் ,பல வருடம் ஜெபித்து இருப்பார். காலங்கள் கடந்த பின் அவர் அந்த ஜெபத்தை மறந்து விடவில்லை. நம்முடைய ஆண்டவர் ஜெபத்த கேட்கிறவர். வானதூதர் செக்கரியாவிடம் பேசிமுடித்ததும் செக்கரியா வானதூதரிடம், இது நடைபெறும் என எனக்கு எப்படி தெரியும்,?. நான் வயதானவன் . என் மனைவியும் வயது முதிர்ந்தவராயிற்றே என்றார். வானதூதர்ச் செக்கரியாவிடம் , நான் கபிரியேல் தூதன். உம்மோடு பேசவும் இந்த நற்செய்தியை உமக்கு தெரிவிக்கவும் அனுப்பப்பட்டேன். என்னுடைய வார்த்தைகளை நீர் நம்பவில்லை. ஆதலால் அவை நிறைவேறும் வரை நீர் பேச்சற்றவராய் இருப்பீர். உம்மால் பேசவே இயலாது என்றார். மக்கள் செக்கரியா திருக்கோவிலில் காலம் தாழ்த்துவதை குறித்து வியப்படைந்தனர் . அவர் மக்களிடம் பேசமுடியாமல் பேச்சற்றவராய் சைகைகள் மூலம் உரையாடினார்.திருப்பணிக் காலம் முடிந்ததும் செக்கரியா அவரது வீட்டுக்கு சென்றார் . (தொடரும்...)

# புனித ஜெரால்டு



இவர் பெல்ஜிய நாட்டில் உள்ள நாமூர் மாகானத்தில் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிறந்தார். செபத்தை மிகமிக நேசித்து எப்பொழுதும் எல்லா இடங்களிலும் செபித்தார். ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு போகும் போது மாட்சிமை மிக்க நல்ல கடவுளை வணங்குவார். வாழ்த்துவார், நன்றி செலுத்துவார். தமக்காகவும் பிறருக்காகவும் மன்னிப்புக் கேட்பதோடு தமக்கும் பிறருக்கும் வேண்டிய வரங்களைக் கேட்பார். சிறுசிறு செபங்களைச் சொல்லி இறைவனது சமூகத்தில் வாழ்ந்தார். அவருடன் அந்நியோந்நியமாய் ஒன்றித்திருந்தார். வேலையைத் தொடங்கும் பொழுது என் இயேசுவே எல்லாம்உமக்காக என்று சொல்லுவார். வேலையின் மத்தியிலும் இதை சொல்லிக்கொண்டே இருப்பார். சிறப்பாக நேரங்கிடைக்கும் போதெல்லாம் செபிக்க கோவிலுக்குப் போய்விடுவார் . அவர் இளைஞனாய் இருக்கும்பொழுது அவரது கடமைகளில் ஒன்று அரசருடன் வேட்டைக்குச் செல்லுவதாகும்.

ஒரு நாள் வேட்டை முடிந்து அரண்மனைக்கு வந்ததும் அரச உணவை அருந்தும்படி எல்லோரும் விரைந்து சென்றனர். நம் புனிதரோ கோவிலுக்குச் சென்று திருப்பேலையில்பேனா இருக்கும் இயேசுவை உபசரித்துக் கொண்டிருந்தார் . இயேசு அவருடன் பேசினார். நேரம் போனதே தெரியவில்லை. இறுதியாக அவர் போக வேண்டி இருந்தது.ஓ இயேசுவுடன் தங்கிருப்பது எவ்வளவு இனிமையாக இருக்கின்றது என்று சொல்லிக் கொண்டே அவர் வெளிக் கிளம்பினார். சந்நியாசியாகி விட்டால் நன்றாக செபிக்கலாம். இன்னும் அதிகநேரம் செபிக்கலாம் என சிந்தித்து உலகத்தைத் துறக்க அவர் தீர்மானித்தார். அவ்விதம் துறவியாகிய பின் நெடுநேரம் செபிக்கலானார். என் ஆன்மா நேசிக்கிறவரை நான் கண்டடைந்து விட்டேன் என்று அடிக்கடி கூறுவார்.

**சிந்தனை :** இரவும் பகலும் ஆண்டவரை வாழ்த்துவதும், அவரது இனிய பிரசன்னத்தில் எப்பொழுதும்,வாழ்வதும் , தங்கள் இதயத்தை அவருக்கு இடைவிடாது அர்ப்பணிப்பதும் எத்தனையோ பெரும் பேறு ! வேறு ஒரு வேலையும் செய்யாமல் கடவுளுக்காகவே வாழ்ந்தவர்கள் உண்மையாகவே பேறுபெற்றவர்கள். (புனித ஜெரால்டு)

**செபம் :** ஆண்டவரே எப்பொழுதும் எல்லா இடங்களிலும் செபிக்க எங்களுக்கு கற்பியும்.

**– தூயவர்களின் வரலாறு**



அருள்தரும் இமயம்

# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

1. திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி – அனிஸ், சோனியா ( தூத்தூர் )
2. எவ்வித வசதியும் இன்றி இருந்த நிலையில் பதினைந்து லட்சம் மதிப்பில் நல்ல இல்லம் தந்தமைக்கு நன்றி – கிறிஸ்து இடிமை – சாந்தி, ( விழிஞம் )
3. மன அழுத்தத்தில் இருந்து விடுதலை தந்தமைக்கு நன்றி – சிபி, ( புலியூர் )
4. காணாமல் போன பொருள் கிடைத்தமைக்கு நன்றி – ரேகா, ( மரியநாடு )
5. குடிபழக்கம் முற்றிலுமாக தீர்ந்தமைக்கு நன்றி – ராஜ்மதன், ( பொழியூர் )
6. சுகப்பிரசவம் கிடைத்தமைக்கு நன்றி – நீனி, ( சின்னவிளை )
7. நல்ல வேலை கிடைத்தமைக்கு நன்றி – செல்வக்குமார், ( திசையன்விளை )
8. லோன் கிடைத்தமைக்கு நன்றி – ஜெபரால்டு, ( நீரோடி )
9. குழந்தைக்கு நற்சுகம் கிடைத்தமைக்கு நன்றி – ராணி, (நீரோடி )
10. சுவாச நோய் நீங்கி நற்சுகம் தந்தமைக்கு நன்றி – மார்கரேட்செல்வராணி, ( பொற்பை )
11. குழந்தை வரம் கிடைத்தமைக்கு நன்றி – சீனு, ரதி ( தேமான்விளை )
12. திருமணம் நல்ல முறையில் நடந்தமைக்கு நன்றி – கில்டா, ( உவரி )
13. ஊதிய உயர்வு கிடைத்தமைக்கு நன்றி – வின்சி, ( குதிரை பன்றிவிளை )
14. திருமண வரம் கிடைத்தமைக்கு நன்றி – சரிதா, ( வெட்டுக்காடு )
15. இல்ல வேலை பூர்த்தியானதற்கு நன்றி – ரவி, ( காரவிளை )
16. முடக்குவாதத்திலிருந்து நற்சுகம் கிடைத்தமைக்கு நன்றி – பிஜி, (விழிஞம் )
17. நல்லவேலை கிடைத்தமைக்கு நன்றி – குரூஸ்மார்வில், ( களக்காடு )
18. சான்றிதழ் கிடைத்தமைக்கு நன்றி – அனிஸ், ( பேசில் )
19. குடும்ப சமாதானம் கிடைத்தமைக்கு நன்றி –ஜேசுதுரை, ( சுப்ரமணியபுரம் )
20. நோய் நீங்கி நற்சுகம் கிடைத்தமைக்கு நன்றி – யோஜினா , ஜார்ஜினி ( உடன்குடி )
21. நினைத்தக் காரியம் நடந்தமைக்கு நன்றி – விண்ணரசன், ( குறும்பனை )
22. வழக்கில் வெற்றி கிடைத்தமைக்கு நன்றி – ஜோயி, ( அஞ்சுதனை )
23. கால்வலி நீங்கியதற்கு நன்றி – ராஜம், ( மரியநாடு )
24. பதவி உயர்வு கிடைத்தமைக்கு நன்றி – எதிஷ், ( விழிஞம் )
25. கடன் பாரம் தீர்ந்தமைக்கு நன்றி – மேரி அருள்தாஸ், ( இடிந்தகறை )
26. திருமணம் நல்ல முறையில் நடந்தமைக்கு நன்றி –இஞ்ஞாசிதுரை , ஜெசிலி (பொத்தகாலன் விளை)
27. வெளிநாடு செல்ல விசா கிடைத்தமைக்கு நன்றி – ரோகன், (கீழமனக்குடி)
28. பிரிந்த குடும்பம் ஒன்று சேர்ந்தமைக்கு நன்றி –வளன் ,டெரன்ஸியா (தூத்தூக்குடி )
29. தொழில் வளம் கிடைதமைக்கு நன்றி – அந்தோணி ராயப்பன், ( தருவக்குளம் )

# கவிதைச் சோலை

## அற்புதத் தாயே!

அழுதபடி ஆலயம் வந்து நின்றேன் - அன்னை
அழுகை ஏன் என்றபடி எனை நோக்கினாள்
தொழுதபடி முழங்கால் நின்றேன் - அன்னை
அமைதியாய் அமர்வாய் என்றாள்
எண்ணம் போல் வாழ்வாய் என்றாள்
- அன்னை ஏன் உனக்கினி கவலை என்றாள்
உள்ளதைச் சொல்ல என்னால் முடியவில்லை
- அன்னையென் உள்ளத்தைத் தானாய் அறிந்தாள்
கவலையும், பயமும் கற்பனையே அதைவிட்டு
- அன்னை கடமையைத் தொடர்வாய் என்றாள்
அஞ்சிடாது நடக்கச் சொன்னாள் - அன்னை
அடக்கமுடன் வாழ்வாய் என்றாள்
பெறுவதை விடுத்துப் பிறர் வாழவே - அன்னை
தருவதே தரும் இன்பம் என்றாள்.
திருமணவரம் தந்து திருமறை வளர்த்திடும் எம்
- அன்னை திருக்கல்யாணத்தாய்
மரியே நீ வாழ்க! என்றேன்

**– L.வினி லியோ**

## அன்பின் பெருமை!

**அ**ன்பை விதைப்போம்
**ஆ**னந்தம் விளைவிப்போம்
**இ**ன்னலை களை எடுப்போம்
**ஈ**ரமனதால் மனிதம் வளர்ப்போம்
**உ**ள்ளத்தில் கருணையோடு–மன
**ஊ**னத்தை சரி செய்வோம்
**எ**ண்ணத்தில் தெளிவோடு
**ஏ**ற்றமுடன் வாழந்திடுவோம்
**ஐ**யமே வேண்டாம் – இனி
**ஒ**ன்றுபோல் நினைத்திடுவோம்
**ஓ**ங்கும் கோபம் அடங்க
**ஔ**டதமே அன்பின் வழி
அஃதே அன்பின் பெருமை!

**–அந்தோனி ஜெர்லின்,**பொற்பை

## அன்றும் இன்றும்

அன்று அன்னையின் திருப்பெயர் உபகார அன்னை
இன்று, அன்னையின் திருநாமம் திருக்கல்யாணத் தாய்
அன்று ஆண்டுக்கு ஒரு விழா திருவிழா என மகிழ்ந்தோம்
இன்று, மாதம் ஒருமுறை திருவிழா, பெருவிழா வியப்பு
அன்று அன்னையின் விழாவில் ஆலயம் ஜொலிக்கும்
இன்று அம்மா நும் கருணையால் ஊரே ஜொலிக்குது
அன்று போக்கத்த ஊரென்று பெண் தர மறுத்தனர்
இன்று, அம்மாவின் ஊரென்று வரன்கள் கூடி வருகின்றது
அன்று குலத்தொழில் குன்றியதால் வாழ வழியில்லை
இன்று குவலயமே வியக்குதே அம்மா! எம் ஊர் கண்டு
அன்று ஊரெங்கும் ஓலைக்குடிசை, ஓட்டுவீடு, வறுமை
இன்று தாயே அருள் தரும் இமயம் குடிசைகள் கோபுரமாகுது
அன்று எம்குலமுதுவர் வித்திட்ட பக்தி பண்பாட்டால்
இன்று எம்குலம் தழைக்க பொற்பை வந்த பொற்றாமரையே
அன்றும் இன்றும் என்றும் எமைக் காத்து அருள்வரம் தந்திடும்
அன்னையே திருக்கல்யாணத்தாயே வாழிய வாழிய வாழ்கவே

**- எம் ஸ்டீபன்ராஜ்,** (பணி ஓய்வு த.ஆ), பொற்பை

## வெற்றி!

முடியாது என்று நினைத்தால்
அது முடியாமல் தான் போகும்
முடியும் என்று நினைத்து
செயல்பட்டு பாருங்கள் நிச்சயம்
வெற்றி தேடிவரும்
பிரச்சனைகள் நிறைந்ததுதான்
வாழ்க்கை அவற்றைக் கண்டு
அஞ்சி ஒதுங்கி விடாமல் எதிர்த்து
நில்லுங்கள் அடுத்த தடவை
பிரச்சனைகள் உங்களை
நெருங்க பயந்து
ஒதுங்கி ஓடிவிடும்.

**- A.M.ஆகாஷ் துரை,** வெள்ளக்கோவில்

# பிறந்த நாள் வாழ்த்து

பெத்த பொண்ணு எனக்குப் புத்தி சொன்னாள்
கத்திப் பேசினால் கரையும் ஆயுள் என்றாள்
மௌனம் காத்தால் மனமும் தெளியும் என்றாள்
மனதைரியம் கொண்டால் தெய்வமும் தெரியும் என்றாள்!
தீது பேசினால் தீதே விளையும் என்றாள்
நல்லதைப் பேசினால் நன்மையே பெருகும் என்றாள்
சிந்திக்க வாழணும் பிறர் நிந்திக்க வாழ வேணாம் என்றாள்
பிழைகளை திருத்தி வாழணும் பழிசுமந்து வாழ வேணாம் என்றாள்
உண்மையாக வாழணும் பொய்மையில் வாழ வேணாம் என்றாள்
புண்ணிய வாழ்வு வாழணும், புகழுக்காக வாழ வேணாம் என்றாள்
அடக்கமாக வாழ்ந்தால் அதுவே அருளின் தொடக்கமான வாழ்வு என்றாள்
கலக்கமே வேண்டாம் நமக்குக் கல்யாணத்தாய் துணையிருப்பாள் என்றாள்
கர்வம் மறைந்து கருணை பிறந்து மகிழ்வினைப் பெற்றிட
இனிய கருத்துக்களை கனிவாய் கூறி தந்தையெனை உணரவைத்து
கருத்தாய் மொழிந்துரைத்த தென்றலெனும் என்மகளை
வாழ்த்துகிறேன் இதயத்தால் பல்லாண்டு வாழ்க! வாழ்கவே!!

– **Y.V. ராஜ்,** சென்னை–106

## பாசம்

திருக்கல்யாண அன்னையே
காற்றும் இசையாகும்
வாசித்தால்...
வார்த்தையும் கவிதையாகும்
யோசித்தால்...
அகிலமே அடிமையாகும்
நேசித்தால்....
நானும் அடிமையானேன்
உன் பாசத்தால்....
கனவு என்பது
காலை வரை – உன்
நினைவு என்பது
என் காலம் உள்ள வரை

–**P. ஜோஸ்பின்,** பொற்பை

## மாமரியே நீ வாழ்க!

பொற்பை நகரினையே
புதுமை நகரமாக்கி
பொன்றா வனப்புடனே
புதுப்பொலிவு கூட்டி
பொறுப்புடனே பக்தர்களை
புகழின் உச்சியில்
பொங்கிடும் மகிழ்ச்சியினை
புனைந்திட்ட மாமரியே நீ வாழ்க!

– D. **ஜோஸ்பின்மேரிதாசன்,** கவரப்பேட்டை

## திருத்தல நாயகியே!

ஒளிப்பிழம்பாய் பொற்பையே
ஒருங்கிணைந்த பக்தர்களை
ஒற்றுமையாய் உருவாக்கி
ஓங்கிப் புகழ் பெறுவாய்!
திருத்தல நாயகியே
திருப்பொற்பையின் காவலியே
திங்கள் தோறும் நின் புதுமை
தீம் பழமாய் பாயுது காதினிலே

– D. **சுகிர்தமணி அன்பரசன்,**கவரப்பேட்டை

## சிந்தனைத் துளிகள்

கத்தியின் கூர்மையால் ஆபத்து விளையும்
புத்தியின் கூர்மையால் ஆபத்து விலகும்!
யுத்தம் தொடுப்பதால் உயிர்கள் போக்கப்படுது
ரத்தம் கொடுப்பதால் உயிர்கள் காக்கப்படுது
துணிவால் உண்டாகும் நன்மையைவிட
பணிவால் உண்டாகும் நன்மை அதிகம்
பயிர் வாழ்க்கைக்கு மண்ணில் ஈரம் நல்லது
உயர் வாழ்க்கைக்கு நெஞ்சில் ஈரம் நல்லது

– D. **டே. கீர்த்திகா** வெள்ளக்கோவில்

பேசுகிறவனை விட கேட்பவனுக்கு
அதிக புத்தி வேண்டும்
மரியாதையாகப் பேசுவதும் நடப்பதும்
செலவில்லாத செல்வங்கள்
உன்னைப் பார்த்து பிறர்
பொறாமைப் படுகிறார்கள் என்றால் நீ
வளர்ந்து இருக்கிறாய் என அர்த்தம்
பேசப்போவது எல்லாவற்றையும் நன்றாக யோசி
யோசிப்பதை எல்லாம் பேசி விடாதே!

– A.M. **ஜெபஆஷா** வெள்ளக்கோவில்

# காணாமற் போனமகன்

லூக்கா நற்செய்தி நூலின் 15 ஆம் அதிகாரத்தில் 11 முதல் 32 வரை உள்ள திருவசனங்களில் இந்த உவமைக் கதையை நாம் காண்கிறோம். ஒரு மனிதனுக்கு இரண்டு புதல்வர்கள். இளையவன் தன் தந்தையிடமிருந்து பிரிந்து செல்கிறான். தன் செல்வத்தையெல்லாம் அழிக்கிறான்.வறுமையில் வாடி, மனம் திரும்பி மீண்டும் தந்தையிடம் வருகிறான். தந்தை அவனை அன்போடு மன்னித்து ஏற்றுக் கொள்கிறார். பாவம் செய்பவன் தன் பாவத்திற்காக மனம் வருந்தி இறைவனிடம் திரும்பி வரும்போது இறைவன் மிகுந்த மகிழ்ச்சியோடு அவனை ஏற்றுக் கொள்வார் என்றும் இறைநீதியை நாம் இக்கதையின் மூலம் அறிந்து கொள்கிறோம். ஆனால் கதை இத்துடன் முடிந்துவிடவில்லை.இனிதான் வேறொடு முக்கியமான உண்மையை நாம் காண வேண்டியவர்ளாய் இருக்கிறோம். அதுதான் மூத்த மகனின் நிலை.

தங்களிடமிருந்து பிரிந்து போன தன் சொந்தத் தம்பிக்காக அவன் மனம் வருந்தவில்லை. திருந்தி வந்த தம்பியைக் குறித்து மனம் மகிழவில்லை. மாறாக தம்பியின் மீது தந்தை காட்டிய அன்பைக் கண்டு இனமுற்றான். வீட்டிற்குள் போகவே விருப்பம் இல்லா திருந்தான் தன்னைக்குறித்து தானே நற்சான்று கொடுக்கிறான். இத்தனை ஆண்டுகள் நான் அடிமை போன்று உமக்கு வேலை செய்து வருகிறேன். உம்கட்டளைகளை ஒருபோதும் மீறியதில்லை இது போன்ற மனநிலையில் இருப்பவர்கள் இன்று அதிகமாகக் காணப்படுகிறார்கள். நான் நல்லவன். இறைவார்த்தையின்படி நடப்பவன். என்மீது எந்தக்குற்றமும் இல்லை எனத் தனக்குத்தானே நற்சான்று கொடுப்பவர்கள் மூத்தமகனிடம் நேர்மை இருக்கிறது. நீதி இருக்கிறது. ஆனால் அன்பு இல்லை. ஆனால் நம் தந்தையாகிய இறைவனோ நேர்மை, நீதியைக் காட்டிலும் அன்பையே அதிகம் விரும்புகிறவராய் இருக்கிறார்.

அன்பு எனக்கு இல்லையேல் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமும் போலாவேன் (1கொரி 13 :1)

திரும்ப வந்த தம்பியைக் கண்டவுடன் அண்ணன் ஓடிச்சென்று கட்டித் தழுவியிருக்க வேண்டும். ஆனந்தக் கண்ணீர் சிந்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் தந்தையின் மனம் பூரித்தும் போயிருக்கும். அப்படிப்பட்ட மனநிலையையே தந்தையாம் இறைவன் நம் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கிறார்.

நாம் அனுதினமும் செபிக்க வேண்டும். நமக்காக நம் குடும்பத்தினருக்காக, நண்பர்களுக்காக, உறவினர்களுக்காக செபிக்க வேண்டும். குறிப்பாக வறுமையில் வாடுபவர்களுக்காக, ஆதரவற்ற அனாதைகளுக்காக, பிணியால் வாடுபவர்களுக்காக வேண்டுடுதல் செய்ய வேண்டும்.மதுபோதை என்னும் கொடிய பழக்கத்திற்கு அடிமையாகி தன்னையும் கெடுத்து, தன் குடும்பத்தையும் மறந்து திரியும் சகோதர நண்பர்களுக்காக மன உருக்கத்தோடு வேண்டுதல் செய்வோம். பிறருக்காக செய்யும் வேண்டுதல்களே நம் செபத்தை முழுமையடையச் செய்யும் . திருந்த வேண்டிய மூத்த மகனைக் குறித்தே இறைவன் இன்று அதிக வருத்தம் உடையவராய் இருக்கிறார். ஏனெனில் இன்றைய நாகரீக உலகில் மூத்த மகன்களே அதிகம் காணப்படுகிறார்கள்.

– **அண்ணாமலை**, தலைமை ஆசிரியர் (ஓய்வு)



# எனது கிராமம்

– ம. ஜேசுதாசன்
(முன்னாள் தலைவர்,
தமிழ:நாடு மெர்க்கண்டைல் வங்கி)

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால் கத்தோலிக்க கிறிஸ்துவ மதம் இந்தப் பகுதியில்பரவியபோது அந்த மக்களுடைய ஆன்மீகத் தேவைகளை கவனிப்பதற்கு போதிய குருக்கள் இருந்ததில்லை. அதற்காக ஒவ்வொரு ஊரிலும் உபதேசியர் என்று ஒருவரை நியமித்தார்கள். இந்த உபதேசியர்தான் கோவில் வழிபாடு, திருமுழுக்கு, திருமணம், கல்லறை அடக்கம், ஞான உபதேசம் சம்மந்தமான எல்லா வேலைகளையும் கவனித்து வந்தார். சுருக்கமாக சொன்னால் , உபதேசியர் என்பவர் ஊரில் சர்வ வல்லமை பொருந்தியவராகத் திகழ்ந்தார். பொத்தக்காலன் விளையைப் பொருத்தமட்டில் , உபதேசியாரும் முக்கந்தரும் சம அதிகாரத்தோடு ஊர் நிர்வாகத்தை கவனித்தனர். அந்த நாட்களில் முதல்முதலாக கிறிஸ்தவராக மாறிய ஏசுவடியான் என்பவர் சாத்தான்குளம் அருகில் உள்ள கருங்கடல் கிராமத்தில் உபதேசியாக நியமிக்கப்பட்டார் . சில வருடங்களுக்குப் பிறகு அங்கிருந்து வெளியேறி பொத்தக்காலன்விளை கிராமத்தில் குடியேறி முதல் உபதேசியாராக பொறுப்பேற்றார். பொத்தகாலன்விளையில் குடியேறிய ஒரு சில ஆரம்பக் கால குடும்பங்களில் இவருடைய குடும்பமும் ஒன்றாக இருந்திருக்க வேண்டும். இவருடைய காலத்திற்குப் பிறகு இவரது மகன் மரிய சவரிமுத்து உபதேசியார் பொறுப்பேற்றார். இவர் மிகவும் புகழோடும் செல்வாக்கோடும் திகழ்ந்தார். இவருடைய காலத்தில்தான் ஓலைக் குடிசையாக இருந்த மாதா கோவில் ஓடு போட்ட கட்டிடக் கோவிலாக கட்டப்பட்டது. இவருக்குப் பிறகு இவரது மூத்த மகன் ஏசுவடியான் என்பவர் உபதேசியாரானார். இந்த இரண்டாவது ஏசுவடியான் உபதேசியார் 19 ம் நூற்றாண்டு துவக்கம் வரை உபதேசியாராக இருந்திருக்க வேண்டும். இவருடைய மகன் ஞானாதிக்கம் உபதேசியார். இவரும் பரஞ்சோதிமுக்கந்தரும் சம வயதுடையவர் ஆனதால் அநேகமாக ஞானதிக்கம் உபதேசியார் 1930 வாக்கில் பொறுப்பேற்றிருக்க வேண்டும். இந்த ஞானாதிக்கம் உபதேசியாரைப் பற்றி இந்த இதழில் பார்ப்போம்.

ஞானாதிக்கம் உபதேசியார் 1885- ம் ஆண்டு பிறந்தார். இளம் வயதிலேயே கொழும்பு சென்று வியாபாரம் செய்ய வாய்ப்பு கிடைத்தது. அவரது தந்தையின் சகோதரியை ( அதாவது அத்தையை ) தெற்கு நரையன்குடியிருப்பைச் சேர்ந்த கந்தசாமி நாடார் மகன் நடேசன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்திருந்தார்கள். இந்த நடேசன் என்பவர் கிறிஸ்தவராக மதம் மாறி சற்குணம் என்ற பெயரோடு கொழும்பு நகரில் வியாபாரம் செய்து நல்ல செழிப்போடு வாழ்ந்தார் அவருடைய அழைப்பை ஏற்று இளம் ஞானாதிக்கமும் அவரது தம்பி பரஞ்சோதியும் கொழம்பு சென்றார்கள். அங்கு சில ஆண்டுகள் வியாபாரம் செய்து செல்வம் சேர்த்து ஊருக்கு வந்து போய் இருந்தார்கள். இறுதியாக 1925 - 30 வாக்கில் ஊர் திரும்பி தந்தையின் வழியில் உபதேசியார் பொறுப்பை ஏற்றார். இவடைய குடும்பம் மிகப் பெரியது. முதல் தாரத்திற்கு பிறந்தது 5 பிள்ளைகள் - மூன்று ஆண்கள் , இரண்டு பெண்கள் .ஆண்களில் ஒருவர் இலங்கை குடியுரிமை பெற்று அங்கேயே தங்கிவிட்டார் . மற்றும் இருவர் இலங்கையில் வியாபாரம் செய்து செல்வம் சேர்த்து ஓய்வுக் காலத்தில் ஊருக்குத் திரும்பினார்கள் . பெண்களில் உருவர் புனித அன்னம்மாள் சபையில்

கன்னியாஸ்தியாக சேர்ந்து அந்த சபையின் உறுப்பினராகவே கடைசி வரை வாழ்ந்தார்கள். உபதேசியாருடைய முதல் தாரம் இறந்தபின் இரண்டாவதாக ஆறுமுகநேரியைச் சேர்ந்த சாந்தம்மாள் என்பவரை திருமணம் செய்தார். அவர்களுக்கு மூன்று ஆண்களும், ஒரு பெண்ணும் பிறந்தனர். ஆண்களில் ஒருவர் வடக்கன்குளத்தில் உயர் நிலைப்பள்ளி பயின்று இடைநிலை ஆசிரியரானார். பின்னாளில் பஞ்சாயத்து தலைவராகவும் ஆனார். இளையவர்தான் பேராசிரியர் ஜேசுதுரை. அவருடைய துணைவியார் சென்னை உயர்நீதிமன்நத்தின் முதல் பெண் நீதிபதியாக நிணுமிக்கப்பட்ட திருமதி. பத்மினி ஜேசுதுரை அவர்கள் . இவர்களைப் பற்றி இன்னொரு கட்டுரையில் விரிவாக எழுத நினைத்துள்ளேன். இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மேலும் பலர் பிரகாசபுரம், ஏரல், கட்டப்பாடு போன்ற வெளி ஊர்களுக்கும் சென்று அங்கு உபதேசியார்களாக பணியாற்றியுள்ளனர். பாரம்பரியம் மிக்க இந்தக்.குடும்பம் பரந்து விரிந்த பழமையான ஒரு ஆலமரம்போல் காட்சியளிக்கிறது.

ஞானாதிக்கம் உபதேசியார் ஒரு கம்பீரமான தோற்றம் உடையவர். நல்ல உயரம் . உயரத்திற்கேற்ற பருமன், குரல் வெண்கலக்குரல். அவரைப் பார்க்கும்போது ஒரு பயம் கலந்த மரியாதை தோன்றும். கோவில் வழிபாட்டின்போது யாராவது பேசினாலோ அல்லது குழந்தைகள் அழுதாலோ ஒரு குரல் கொடுப்பார். அனைவரும் கப்சிப் ஆகிவிடுவார்கள் அவர் ஜெபம் சொல்லும் பணியே தனியாக இருக்கும். ஞாயிறு மாலை ஆராதனையின் முன்பு மிகவும் மிகுந்த மதுரமாயிருக்கிற அர்ச்சிக்கப்பட்ட தேவ நற்கருணையே ஸ்தோத்திரம் என்று ஆரம்பிக்கிற ஜெபத்தை பாடலாக சொல்ல ஆரம்பித்தால் வெளியில் இருப்பவர்களும் கோவிலுக்குள் வந்துவிடுவார்கள். அப்படி ஒரு கர்ச்சனையும், பக்தியும் கலந்து இருக்கும்.

1935 -ம் ஆண்டு பொத்தகாலன்விளை தனிப்பங்கானதும் உபதேசியாருடைய சுமை ஓரளவு குறைந்தது. அதன்பின் பங்குக் குருவானவரோடு இணைந்து தன் பணியைத் தொடர்ந்தார். அதே சமயம் தன் நெல் அரிசி வியாபாரத்தையும் கவனித்து வந்தார். தந்தை பங்காரு அடிகளார் பங்குக் குருவானவராக இருந்த காலம் வரை ஒரு பிரச்சனையும் இல்லாமல் சென்றது. 1949 - ம் ஆண்டு மஸ்கரனாஸ் அவர்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்தது இருவருக்கும் சிறுசிறு பிரச்சனைகள் தோன்றிக் கொண்டே இருந்தன. அந்தக் கால கட்டத்தில் புதிய ஆலயத்திற்கு அஸ்திவாரம் போடப்பட்டு வேலைகள் மந்தமாக நடந்து சென்றன. அதை துரிதப்படுத்தும் நோக்கத்தோடு 1950 -ம் ஆண்டு உபதேசியார் தன் சொந்த முயற்சியில் சொந்த செலவில் கொழும்பு சென்றார்.

அங்கு நம்மூர் மக்களை சந்தித்து புது ஆலயப் பணிக்காக நன்கொடை வசூலித்தார். தான வசூலித்த நன்கொடை பணத்தை பங்குத் தந்தையிடம் கொடுத்தால் , அவர் வேறு வகைக்கு செலவழித்துவிடுவார், ஆலயப்பணிக்கு தடங்கல் ஏற்படும் என கருதி , பணத்தை பங்குத் தந்தையிடம் கொடுப்பதை தவிர்த்தார் . அது மாத்திரமல்ல, விஷயத்தை முக்கந்தரிடம் கூறி ஆலோசித்து இருவருமாக சேர்ந்து உபதேசியார் கொண்டு வந்த பணத்தைக் கொண்டு புதிய ஆலயத்தின் முன் கோபுரத்தின் அடியில் அஸ்திவாரத்தை பலப்படுத்துவதற்கு செல வழித்தனர்.

இந்த நிகழ்வு தந்தை மஸ்கரனாஸ் அடிகளாரை வெகுண்டு எழச் செய்தது. அவருடைய கோபம் எல்லை மீறியது . விளைவு உபதேசியாரின் பதவி பறிக்கப்பட்டது. அதோடு , அவரை திருச்சபையிலிருந்தே நீக்கி வைத்தார். அவருக்கும் , அவரது குடும்பத்தினருக்கும் பல இன்னல்களை கொடுத்தார். உபதேசியாரின் பிள்ளைகள் பள்ளியிலும், கல்லூரியிலும் பயிலுவதற்கு தடைக் கற்களைப்போட்டார். அருட்சாதனங்கள் கொடுப்பதற்கும் மறுத்தார். உபதேசியார் தன் பங்கிற்கு தானகவே பதவி விலகுவதாக எழுதிக் கொடுத்தார். இந்த சூழ்நிலையில் , முக்கந்தர் ஆரம்பத்தில் நடுநிலையில் இருந்தாலும் இறுதியில் பங்குக்குருவோடு சேர்ந்து கொண்டார். பங்கு மக்களில் பெரும்பாலோர் இந்த பிரச்சனையை சாமியாருக்கும் உபதேசியாருக்கும் இடையே நடக்கும் தனிப்பட்ட சண்டை என்றே பார்த்தனர். இந்த சண்டையில் ஊர் பாரம்பரியத்தின்படி அவர்கள் பங்குக்குருவானவருக்கு ஆதரவு கொடுத்தார்கள். ஆனால் உபதேசியாரின் குடும்பம் பெரிய செல்வாக்கான குடும்பம்ஆனதால் அவருக்கும் ஒரு பகுதினர் ஆதரவு அளித்தனர்.

இதனால் ஊர் இரண்டானது. பதட்டம் தொற்றிக் கொண்டது. இவ்வளவும் நடந்து தான் அவமானப்படுத்தப்பட்ட பிறகும் உபதேசியார் வேறு மதத்திற்கு மாறுவது பற்றியோ அல்லது வேறு சபையை நிறுவுவது பற்றியோ யோசிக்கவில்லை. மாறாக தன்னுடைய வியாபாரத்தில் அதிகம் கவனம் செலுத்தினார் . ஊர் விவகாரங்களில் ஆர்வம் காட்டுவதை தவிர்த்தார். அவருடைய பொறுமைக்கு பலன் கிடைத்தது. 1953 -ம் ஆண்டு மஸ்கரனாஸ் சுவாமியார் மாற்றலாகி தந்தை சிலுவை அந்தோணி அடிகளார் பங்குத் தந்தையாக பொறுப்பேற்றார். முந்தைய கட்டுரையில் கூறியிருந்ததுபோல், தந்தை சிலுவை அந்தோணி அடிகளாரின் அணுகுமுறையால் சண்டைகள் ஓய்ந்து ஊரில் சமாதானம் நிலவியது.

இந்தநேரத்தில் ஞானாதிக்கம் உபதேசியார் சம்பந்தப்பட்ட ஒரு சுவையான விஷயத்தை வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நான் 1992 -ம் ஆண்டு தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியின் சேர்மனாக பொறுப்பேற்றபோது அங்கு எனக்கு ஒரு பெரிய ஆச்சரியம் காத்திருந்தது.

அந்த வங்கியின் பங்கு தாரர்களின் பட்டியலில் பொத்தக்காலன்விளை ஞானாதிக்கம் நாடாரும் , அவரது தம்பி வரஞ்சோதி நாடாரும் ஆரம்பக்கால பங்குதாரர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தனர். இதை அறிந்து எனக்கு எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்பட்டது. என்னுடைய கிராமத்திலிருந்து இருவர் வங்கியின் பங்குதாரர்களாக இருக்கிறார்கள் என அறிந்ததும் நான் மேலும் ஒரு அடி உயர்ந்துவிட்டதாக உணர்ந்தேன். வங்கியின் இயக்குனர்களிடமும் மற்ற வங்கி அதிகாரிகளிடமும் இந்த வியத்தை கூறி என்னுடைய மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டேன்.

ஆனால் பங்குதாரர்களின் முழு விபரமும் இல்லாததால் பங்குகள் முடக்கப்பட்டு உயிரற்ற பங்குகளாக கணக்கில் காட்டப்பட்டிருந்தன் நடந்தது இது தான். 1920 ம் ஆண்டு வாக்கில் இந்த வங்கி தொடங்கப்பட்டபோது இதை தொடங்கிய பெரியவர்கள் கொழும்பு நகருக்குச் சென்று வங்கியின் ஆரம்ப மூலதனத்தை பிரிப்பதற்காக அங்கு வாழ்ந்து வந்த நாடார் வணிகர்களை அணுகியுள்ளார்கள். அந்த சமயத்தில் சகோதரர்கள் இருவரும் ஒரு தொகையை கொடுத்து பங்குகள் வாங்கியுள்ளார்கள். ஆனால் இந்த தொகையை நாடார் வங்கி ( மெர்க்கண்டைல் வங்கியின் ஆரம்ப கால பெயர் ) ஆரம்பிப்பதற்கு கொடுத்த நன்கொடையாக கருதி அதை முழுவதும் மறந்துவிட்டார்கள். இதனால் அவர்களுக்கு பங்குதாரர்கள் என்ற உரிமையில் கிடைக்க வேண்டிய உரிமைப் பங்குகள், இலவசப் பங்குகள் மற்றும் லாபப்பங்கீடுகள் எதுவும் கிடைக்காமல் போய்விட்டது. இது என் கவனத்திற்கு வந்ததும் , உரிய ஆவணங்களைப் பெற்று பங்குகளை வாரிசுகளுக்கு பெயர் மாற்றம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்தேன்.

1953 - ம் ஆண்டு புதிய பங்குக் குருவானவர் வந்து சண்டைகள் ஓய்ந்தாலும் ஞானாதிக்கம் உபதேசியார் மீண்டும் அந்த பதவிக்கு வருவதில் எந்த ஆர்வமும் காட்டவில்லை . அவருக்குப் பிறகு உபதேசியார் என்ற பதவியின் அதிகார எல்லையும் முக்கியத்துவமும் தலைகீழாக மாறிபோய்விட்டது. இந்த மாறிய சூழ்நிலையில் அவர் தன்னுடைய வியாபாரத்தையும் , ஓய்வையும் நாடியதில் ஆச்சரியமில்லை. சில ஆண்டுகளுக்குப் பிறகு வியாபாரத்தையும் விட்டுவிட்டுமுழு ஓய்வில் இருந்தார் . எந்தவிதமான நோய் நொடியும் அவரை அண்டவில்லை. இறுதி நாட்களில் அவருக்கு பேச்சுத்துணையாக இருந்தவர்கள் ஓய். வி. என்று அழைக்கப்பட்ட வியாகந்தோனி நடாரும், சவரிராயன் நடாரும் , பஞ்சு பெட்டியார் என்று அழைக்கப்பட்ட பரஞ்சோதி நாடாரும் தான். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், ஒரு மனிதனின் இறுதி காலங்களில் அதுவும் 90 வயதை நெருங்கும் ஒருவருக்கு மிகவும் தேவை பேச்சுதுணை.இந்த தேவையை மிக நேர்த்தியாக செய்தனர் அந்த மூவரும். அவருடைய நீண்ட வாழ்க்கைப் பயணம் இறுதியாக 1974 - ம் ஆண்டு மே மாதம் 22 - ந் தேதி முடிவுற்றது. ஒரு சில மாதங்களிலேயே அவருடைய துணைவியாரும் அவரோடு சேர்ந்துவிட்டார்களங. அதோடு ஒரு சகாப்தம் முடிவுற்றது. **(இன்னும் வரும்...)**

# கிறிஸ்து *வெற்றியின்* அரசர்

கிறிஸ்து அரசர் மனிதனாகப் பிறந்து அவருடைய மக்களாகிய நம்மீது அபரிமிதமான அன்பைப் பொழிந்து அலகையின் பிடியில் சிக்கித்தவிக்கும் நம்மை மீட்டு நம்மை



ஆட்சி செய்யும் அரசராகத் திகழ்கின்றார். (லூக்.1:31-33 மத்.2:5-6) வெற்றியின் அரசராகத் திகழும் கிறிஸ்து நம்முடைய வாழ்வில் நாமும் அந்த வெற்றிக்கனியை சுவைக்க வழிகாட்டுகின்றார்.

**1.அர்ப்பண வாழ்வு** ( லூக். 2:22)

கிறிஸ்தவர்களாகிய நாம் நம் வாழ்வை முழுமையாக கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

**2. விசுவாசம் (நம்பிக்கை)** (லூக்,4:1-13, 12:22-34, 17:6 யோவா. 11:25-26)

நம் வாழ்வில் எத்தனை சோதனைகள், வேதனைகள் வந்தாலும், கிறிஸ்துவை உறுதியாகப் பற்றிக்கொண்டு அவரில் நம்பிக்கை வைத்து வாழ வேண்டும்.

**3. நற்செய்தியை பரப்புதல்** (லூக். 4:42-44, 9:1-6)

நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் வார்த்தையை நம் வாழ்வில் கடைபிடித்து அதன் வழி நடந்து அவரின்வார்த்தைகளை பறைசாற்றுபவர்களாகத் திகழ வேண்டும்.

**4.கிறிஸ்துவின் சீடராதல்:** (லூக்.14:26-27)

நாம் அனைவரும் நம்முடைய ஆன்மீக வாழ்விற்கு தடையாக உள்ள கோபம், களவு, பொறாமை, பழிவாங்கும் குணம், புறங்கூறுதல், பொய்பேசுதல் போன்றவைகளைக் களைந்து கிறிஸ்துவின் உண்மையான சீடர்களாக வாழவேண்டும்.

**5. நோன்பிருந்து ஜெபித்தல் :** (லூக். 11:1-13, மத்.17:19-21)

நாம் நம் ஆடம்பர வாழ்க்கையை வெறுத்து கிறிஸ்துவுடன் ஒன்றித்து ஜெபிக்க வேண்டும்.

**6. பிறரன்பு :** (லூக்.16:19-26, யோவா 13:34-35)

நாம் நம் அண்டை வீட்டாரிடமும், நம்மைச் சுற்றி வாழும் அனைவரிடமும் அன்புடன் வாழ வேண்டும்.

கிறிஸ்து நம் வாழ்வில் வெற்றியை அளிப்பவர் என்ற நம்பிக்கையுடன் அவரே என்றும் நம்மை ஆளும் அரசர் (லூக் 19:38) யோவா 12:13) என்ற முழு நம்பிக்கையுடன் வாழ கிறிஸ்து அரசரின் பாதம் வணங்கி நம்மையே அவருடைய ஆட்சிக்கு உட்படுத்துவோம்.

**இயேசுவின் இரத்தம் ஜெயம்! கிறிஸ்துவே நம் அரசர்!!**

– **S.நிர்மலா ராணி,** மார்க்கம்பட்டி

# அழகு

ஆறு நாட்களாய் ஆண்டவன் படைத்த அகிலத்தில் உள்ள அனைத்துமே அழகுதான். ஆடும் மயிலுக்குத் தோகை அழகு. கூவும் சேவலுக்கு கொண்டை அழகு. கர்ஜிக்கும் சிங்கத்திற்குப் பிடரி மயிர் அழகு. பிளிறும் யானைக்குத் தந்தம் அழகு. இப்படி உயிரினங்களில் எல்லாம் ஆணினத்தையே அழகு என ஆன்றோர் நவின்றுள்ளனர். ஆனால் மாண்புறு மானிடரில் மட்டும் பெண்களையே அழகு என கவிஞர்கள் பலவிதங்களில் வருணித்துள்ளனர். பெண்களின் கண்களை மீனுக்கும், நடையை அன்னத்திற்கும், இடையை உடுக்கைக்கும், எழில் கொஞ்சும் முகத்தை வெண்மதிக்கும்,பேசும் மொழியை கிளிக்கும் ஒப்பிட்டு அழகு மிகுமங்கையராக சித்தரித்துள்ளனர்.

அத்தகைய பெண்களுக்கு கற்பு அழகு. தாய்மை அழகு . ஆனால் தேவ அன்னைக்கோ கன்னிமை அழகு . எனவே தான் பெண்களுக்குள் எல்லாம் பேரழகு வாய்ந்தவள் என நம் அன்னை கன்னிமரியாள் போற்றப்படுகிறாள். அவள் இறைவனின் சித்தத்திற்கு அடிபணிந்த தாழ்ச்சி அழகு அவளது எளிமை நிறைந்த தோற்றம் எழில்மிக்கது சந்திரனைப் போல் அழகு வாய்ந்தவள் . சூரியனைப் போல் ஒளி நிறைந்தவள். அன்னையின் கண்களின் கருனை அழகு. முகத்தின் சாந்தம் அழகு. இதழின் புன்னகையாகிய பொறுமை அழகு.கரத்தில் கர்த்தர் அமர்ந்துள்ளது அழகு. தலையில் பன்னிரு விண்மீன்களை முடியாகக் கொண்டு பன்னிரு திருத்தாதர்களை வழிநடத்திய விதம் அழகு. அதுமட்டுமா? அன்னையை நோக்கி மன்றாடுபவர்களுக்காக இறைவனிடம் பரிந்து பேசி இறையாசீரை அருள்மழையாகப் பெற்றுத் தரும் பரிவு பேரழகு. இத்தகைய எழில் நிறை அன்னை கன்னிமரி திருக்கல்யாணத் தாய் என்றும் பெயருடன் நம் பொத்தகாலன்விளைத் திருத்தலத்தில் அருள்தரும் இமயமாய், கண்கொள்ளாக் காட்சியாய் கொலுவீற்றிருப்பது சொல்ல முடியா ( அழகு) பொற்பு நிறைந்தது. எனவேதான் பொற்பை என பெயர் பெற்றது. வாருங்கள் அன்னையின் திருத்தலத்திற்கு. அன்னையைக் கண்குளிரக்கண்டு அவளது அருளாசீரை அள்ளிச் செல்லுங்கள்.

–நல்லாசியை **ஞா. ரெஜினாள்மேரி** , பொற்பை

**வாசகர் உள்ளம்**

# எனது கிராமம் – எங்கள் மகிழ்ச்சி

கடந்த சில மாதங்களாக தொடர்ந்து திருக்கல்யாணத்தாய் மாத இதழில் எனது கிராமம் என்ற தலைப்பில் பொற்பை நகர் வரலாற்றுக் காவியமாய் சிற்பி செதுக்கிய ஓவியமாய் எழுதிவரும் திரு. ம. ஜேசுதாசன் அவர்களுக்கு எங்கள் அன்பின் மகிழ்ச்சியை இதய நெகிழ்ச்சியாய் தெரிவித்துக் கொள்வதில் பெருமை அடைகிறோம். அக்டோபர் 2014 திருக்கல்யாணத்தாய் மாத இதழில் எம்குல முதுவர் திரு. பரஞ்சோதி நாடார் முக்கந்தர் அவர்களின் பணி பற்றி மகிவும் சிறப்பாக எழுதி பெருமைப் படுத்தியமைக்காக குடும்ப நன்றியை பொற்பை நகர் குலமக்கள் சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம். – திரு. பரஞ்சோதி முக்கந்தர்

பேரன் –பேத்திகள், உற்றார் உறவினர்கள்,பொற்பை

# துறவறம் –திவ்யா கிங்ஸ்லி, பொத்தகாலன்விளை

அருட்சாதனங்கள் ஏழில் ஒன்று துறவறம் .மற்ற அருட்சாதனங்கள் அனைத்தையும் நம்மால் பெற முடியும். ஆனால் துறவறம் என்பது மிக குறைவான நபர்களாலே பெறப்படுகிறது. ஏனெனில் துறவறம் என்பது எளிதான ஒரு விஷயம் இல்லை. தங்கள் மனதில் இறை அழைத்தலை உணர்ந்த ஒரு நபரால் மட்டுமே இது சாத்தியம். இல்லறத்தில் குடிகொண்டுள்ள நம்மால் இதை நினைத்துக்கூட பார்க்க முடியாது.ஏனெனில் இந்த துறவறத்தார் 13 வயதிலிருந்தே தங்கள் குடும்பங்கள், மகிழ்ச்சிகள், திருவிழாக்கள், வீட்டு விஷேசங்கள் அனைத்தையும் துறந்து நல்ல ஆடை, ஆபரணங்கள் போன்ற உலக காரியங்களில் இருந்து விலகி 10 முதல் 15 ஆண்டுகள் வரை தங்கள் கல்வியை பயின்று, அந்த படிப்பிலே தரப்படும் பல சோதனைகளையும் கடந்து இறுதியாக பட்டம் பெற்று வெளியேறுகின்றனர். இது ஒரு அசாத்திய திறமை. இதற்கு ஈடு இணை அவர்கள் மட்டுமே. சிறு வயதிலே இந்த இறை அழைத்தலை உணர்ந்தவர்கள் உண்மையிலே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஏனெனில் அவர்கள் இயேசு சொன்னது போல தன் தாய், தந்தை, சொத்துக்கள்அனைத்தையும் விட்டுவிட்டு அவரை பின்பற்றி அவர் சீடர்களாக வாழும் உண்மை மாதிரிகள். ஒவ்வொரு நாளும் திருப்பலி நிறைவேற்றும் போது அவர்கள் இயேசுவின் மறுஉருவாக நின்று அதை நிறைவேற்றி நமக்கு ஆசீர் அளிக்கிறார்கள்.இத்தகைய நிலையை எல்லாராலும் அடைய முடியுமா? முடியாது . அப்படியானால் நாம் அவர்களை சக மனிதர்போல் அல்லாமல் அதற்கு மேல் ஒருபடி வைத்துதான் பார்க்க வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு நாளும் நமக்கு ஆசீர் அளிக்கும் அவர்கள் மனதை காயப்படுத்த , கலங்க வைக்க நமக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஏனெனில் அவர்கள் அளிக்கும் ஆசீர் நிறைவாக நமக்கு வந்தடைவதைப்போல அவர்கள் மனம் சஞ்சலப்படும்போது அதன் பலனைஅடைபவர்களும் நாமாகத்தான் இருப்போம் என்பதை மறந்துவிடக்கூடாது. எனவே துறவறத்தை மதிப்போம். நம் குழந்தைகளையும் இயேசுவின் வழி வாழ வற்புறுத்தி நல்லதொரு சமுதாயம் அமைக்க வழிவகுப்போம்.

# மோட்ச அரண்மனை

ஒவ்வொரு சனிக்கிழமையும் மாதாவின் மகிமை மெருகேறும்விதமாக நம் பங்கு தந்தை ரவி பாலன் அவர்கள் வந்த முதல் வாரத்தில் பங்கு பேரவை கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் நம் திருகல்யாண மாதாவின் புகழை ஜெபமாலை பயபக்தியோடு பண செலவில்லாமல் மேன்மை படுத்தவேண்டுமென்று சொன்னார்கள். அதன்படி பங்கு பேரவையில் ஒரு மனதாக முடிவெடுத்து ஒவ்வொரு சனிக்கிழமைதோறும், லூர்து அன்னை ஆலயத்தில், மெழுகு திரி ஏந்தி பக்தியோடு ஊர்வலம் வருவது போல் , நம் ஊரிலும் , மாதாவின் உருவம் ஏந்திய சப்பர பவனியில்,அனைத்து மக்களும் மெழுகு திரி ஏந்தி ஊர்வலமாக தேரோட்ட வீதியில் சுற்றி வர வேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டது. அது போல் நம் பங்கு தந்தையோடு இணைந்து ஒவ்வொரு வாரமும், சனிக்கிழமை ஊர் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, மாலை 6.30 மணிக்கு சப்பர பவனியில் மெழுகு திரி ஏந்தியகையோடு அனைத்து மக்களும் ஜெபமாலை பக்தியோடு ஊர்வலமாக அடிமேல் அடிஎடுத்து வைத்து 7.30 மணிக்கு சப்பரம் மண்டபத்தில் இறக்கி வைப்பார்கள். அப்போது மாதாவின் முகம் சந்தோஷத்தால் பூரிப்பு அடைந்து ஊர் மக்களை உற்றுநோக்கி கொண்டே இருப்பார்கள். உடனே நவநாள் திருப்பலி நடைபெறும். இதே போல வாரம்தோறும் நடைபெறுவது ஊருக்கு ஒரு பெரிய வரப்பிரசாதகமாக இருக்கிறது. இப்படியாக மாதாவின் பக்தியை சிறப்பிக்கவைத்த நம் பங்குதந்தை அவர்களுக்கு இரண்டு மூன்று வாரத்திற்குள். வள்ளியூர் மண்டல முதன்மை குருவாக பதவி உயர்வு கிடைத்தது . இது நம் ஊருக்கு மாதாவால் கிடைத்த பெரிய மகிமை. இந்த சப்பர பவனியின்போது ஆரம்பத்திலும் முடிவிலும், பாடற்குழுவினர் மாசில்லா கன்னியே என்று பாட்டுபாடி வாழ்க வாழ்க என்று பாடும்போது அனைத்து பக்தர்களும் மெழுகு திரியை மேலே தூக்கி பிடிக்கும் போது மோட்சவாசல் என்று தான் நம் முன்னோர்கள் சொல்லக் கேள்வி பட்டிருக்கிறோம் ஆனால் அப்படி அல்ல மோட்ச அரண்மனை போல் காட்சி அளிக்கிறது. அதேபோல் நம் திருக்கல்யாணதாய் வரும் அனைத்து பக்தகோடி மக்களுக்கும் வரங்களை அள்ளி வழங்கி கொண்டு இருக்கிறார்கள். நம்தாயை பற்றி சொல்லி கொண்டே போகலாம்.இதை எழுத ஞானத்தை கொடுத்த இறைவனுக்கு நன்றி.

-y. இருதயராஜ்
ரூபிஸ்டோர் பொத்தக்காலன்விளை

# முதல் திருவிருந்து வாழ்த்து



# M.மெலானியா ரோஸ் ஜோனிசா

## நாள் : 22.10.2014

இறை இயேசுவின்திருஉடலை உட்கொள்ளும் முதல் அனுபவம்!

இறைவன் நிறை ஆசீர் என்றும் உன்னோடு தொடரணும்

என வாழ்த்தும்

ஞானப் பெற்றோர்

**S.அருள் ராயப்ப தாஸ்** I.T.I.,

**A.ஜெஸ்மின் ரேஜிஸ் மேரி** DTE.,



பெற்றோர்

**S.மெசியாஸ் அந்தோணி துரை** M.A.

**M.செல்வின் தங்கமேரி** M.A,B.Ed.

தாத்தா பாட்டி

**G.சந்தன திரவியம் நாடார் – S.மெர்சி ஆஞ்சலாள்**

**K.கஸ்பார் ரோஸ்** (Rtd. Teacher)

**நண்பர்கள் மற்றும் உறவினர்கள்**

**பொத்தக்காலன்விளை.**

## கடந்த மாத கேள்வி-பதில் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| D.ஜோஸ்பின் மேரி தாசன் | கவரப்பேட்டை |
| W. பெமிலா வில்சன் | கவரப்பேட்டை |
| M. அனிதா ஜான்சன் | கவரப்பேட்டை |
| U.பெனிட்டா டோமினிக் | கவரப்பேட்டை |
| S.கீதா சுரேஷ் | கவரப்பேட்டை |
| A. அன்ன புஷ்பம் ராஜன் | கவரப்பேட்டை |
| T. சுகிர்தமணி அன்பரசன் | கவரப்பேட்டை |
| A. ஜோஸ்பின் அபிஷியா | கவரப்பேட்டை |
| A. ஜோசப் அரிஸ்டாட்டில் | கவரப்பேட்டை |
| S. தினேஷ் எல்ஸி | கவரப்பேட்டை |
| U.இமாகுலேட்சியோனா | கவரப்பேட்டை |
| U.ஆண்டனி அருண்ஜோசப் | கவரப்பேட்டை |
| A.அனுஷா அகஸ்டின் | கவரப்பேட்டை |
| D.கலா சகாயம் | கவரப்பேட்டை |
| S.ரீட்டா யோவான் | கவரப்பேட்டை |
| A.பாக்கியலெட்சுமி ஆறுமுகம் | கவரப்பேட்டை |
| லூர்து மேரி தேவசகாயம் | பிரகாசபுரம் |
| S.மலர்விழி செல்வகுமார் | தி.க. குன்றம் |
| A. தெரஸ்லின்ராஜன் | பொற்பை |
| A. ஜான்ஸி சேகர் | பொற்பை |
| S. ஜெயந்தி தங்கம் | பொற்பை |
| G. ரெஜினாள் மேரி | பொற்பை |
| S.மேரி லீலா | பொற்பை |
| A. சகாய லீன் நர்மதா | தோப்புவிளை |
| கபிரியேஸ் மேரி | பொற்பை |
| குயின் ரோஸ் பாக்கியம் | பொற்பை |
| மிக்கேல்ராஜ் மேகலா | மணப்பாடு |
| P. சந்தணதிரவியம் | பொற்பை |
| M.டேவிட்தேவராஜன் | வெள்ளகோவில் |
| J.டாம்சந்த் | பொற்பை |
| S.ஜோஸ்லின் | பொற்பை |
| A.கரோலின் சிறுமலர் | கொழுந்தட்டு |
| S.நிர்மலா சந்தியாகுராஜன் | மார்க்கம்பட்டி |
| D.அந்தோனி ஏசுதாசன் | பொற்பை |
| S.மெர்லின் ரெக்ஸ் | கீழசென்னை |
| M.செல்வகுமாரி | ந. குடியிருப்பு |
| P.மேரி பிரின்ஸிலா | பொற்பை |
| C.அருள்வசந்த் விமலா | கூடன்குளம் |
| A.மேரி ஷாலினி | பொற்பை |
| A.ஜெரிஷ் அந்தோணி ஜாக்சன் | பொற்பை |
| A.அந்தோணி ஷைனி | பொற்பை |
| G.ரெவினியூஸ்ராணி | பொற்பை |
| A.பிரான்சிஸ்பிரபா | பொற்பை |
| E.ஜாண்மேரி | பொற்பை |
| M.டேவிட் லியோன் | பொற்பை |
| A.R.சகாய டாப்னி | பொற்பை |
| A.ஆரோக்கியசாமி | பொற்பை |
| S.சிலுவை அந்தோணி | பொற்பை |
| A.மரிய மிக்கேல் ஜெபர்சன் | பொற்பை |
| பிரின்ஸஸ் ஜேம்ஸ் | பொற்பை |
| A.பாத்திமா மேரி | கொழுந்தட்டு |
| A.சுபஹான் | கொழுந்தட்டு |
| A.ஜெய பவித்ரா | கொழுந்தட்டு |
| A.நேவிஸ் பிரதீபா | கொழுந்தட்டு |
| G. பூபால் | மதுரை |

## கடந்த மாத விவிலிய விடைகள்

1.ஏர் (38:3)
2. கடவுளுக்கு (40 :8)
3. நைல் நதி (41:1)
4. ஆசினத்து (41 : 45)
5. முப்பது வயது (41:46)
6. மனசே (41:51)
7. பலுகுதல் (41: 52)
8. சிமியோன் (42:24)
9. ஒற்றர்கள் (42:31)
10. எபிரேயரோடு (43:32)
11. பென்யமீன் (44:12)
12. எழுபது பேர் (46:27)
13. ஆடு மேய்ப்பவர்கள் (46:34)
14. கோசேன் (47:6)
15. அர்ச்சவர்கள் (47:26)
16. பதினேழு ஆண்டுகள் (47:28)
17. யூதா (49:9)
18. இசக்விர் (49:14)
19. நப்தலி (49:21)
20. நுற்றுப்பத்து ஆண்டுகள் (50:22)

# வாழ்வு தரும் வார்த்தைகள் – நவம்பர் 2014

| தேதி | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|
| 1. | சகல புனிதர் | தி.வெ.7:2-4,9-14 | |
| | | 1யோவா 3:1-3 | மத். 5:1-12 |
| 2. | அனைத்து ஆன்மாக்கள் | ஏசாயா 25:6-9 | |
| | | உரோ 5:511 | மத். 11:25-30 |
| 3. | | பிலி 2:1-4 | லூக். 14:12-14 |
| 4. | புனித சார்லஸ் பொரோமியோ | பிலி 2:5-11 | லூக்.14:15-24 |
| 5. | | பிலி 2:12-18 | லூக். 14:25-33 |
| 6. | | பிலி 3:3-8 | லூக். 15:1-10 |
| 7. | | பிலி 3:17-4:1 | லூக்.16:1-8 |
| 8. | | பிலி 4:10-19 | லூக்16:9-15 |
| 9. | லாத்ரன் பேராலய அபிகேம் | ஏசேக் 25:6-9 | |
| | | 1கொரி 3:9-11,16-17 | யோவா 2:13-22 |
| 10. | | தீத் 1:1-9 | லூக்.17:1-6 |
| 11. | | தீத் 2:1-8,11-14 | லூக். 17:7-10 |
| 12. | புனித ஜோசப்பாத் | தீத் 3:1-7 | லூக். 17:11-19 |
| 13. | | பிலி 7:20 | லூக். 17:20-25 |
| 14. | | 2யோவா 4-9 | லூக். 17:26-37 |
| 15. | புனித பெரிய ஆல்பர்ட் | 3யோவா 5-8 | லூக். 18:1-8 |
| 16. | ஆண்டின் ஞாயிறு | நீ.மொ 31:10-13,19-20,30-31 | |
| | | 1தெச 5:1-6 | மத் 25:14-30 |
| 17. | புனித ஹங்கேரி எலிசபெத் | தி.வெ 1:1-4;2:1-5 | லூக். 18:35-43 |
| 18. | | தி.வெ 3:1-6.14-22 | லூக் 19:1-10 |
| 19. | | தி.வெ 4:1-11 | லூக் 19:11-28 |
| 20. | புனித எட்மண்ட் | தி.வெ 5:1-10 | லூக் 19:41-44 |
| 21. | மரியாள் காணிக்கை ஆக்கப்பட்டது | தி.வெ 10:8-11 | லூக் 19:45-48 |
| 22. | புனித செசிலியா | தி.வெ 11:4-12 | லூக் 20:27-40 |
| 23. | கிறிஸ்து அரசர் பெருவிழா | எசே 34:11-12.15-17 | |
| | | 1கொரி 15:20-26.28 | மத் 25:31-46 |
| 24. | | தி.வெ 14:1-5 | லூக் 21:1-4 |
| 25. | | தி.வெ 14:1-5 | லூக் 21:5-11 |
| 26. | | தி.வெ 15:1-4 | லூக் 21:12-19 |
| 27. | | தி.வெ 18:1-2.21-23;19:1-3.9 | லூக் 21:20-28 |
| 28. | | தி.வெ 21:1-4. 11-21:2 | லூக் 21:29-33 |
| 29. | புனித ஹியூபர்ட் | தி.வெ 22:1-7 | லூக் 21:34-36 |
| 30. | திருவருகைக்கால ஞாயிறு | எசாயா 63:16-17;64:1.3-8 | |
| | | 1கொரி 1:3-9 | மாற்கு 13:33-37 |





# திருவிவிலியம் நமது செல்வம்

## விவிலிய வினா – விடை போட்டி

**பதில்கள் தேடவேண்டிய பகுதி : விடுதலைப்பயணம் அதிகாரம் 1 முதல் 15 வரை**







1. பார்வோனுக்காக கட்டப்பட்ட களஞ்சிய நகரங்கள் எவை?
2. எபிரேயர்களின் மருத்துவ பெண்கள் யாவர்?
3. கடவுள் மருத்துவப் பெண்களுக்கு .....................செய்தார்.
4. மோசேயின் மனைவி பெயர் என்ன?
5. மோசேயின் தலைமகன் யார்?
6. கடவுளின் மலை பெயர் என்ன?
7. மோசேயின் சகோதரர் யார்?
8. இஸ்ரேயல் என் மகன் என்.....................
9. அவர்களே போய் .................... சேகரித்துக்கொள்ளட்டும்.
10. பார்வோனிடம் பேச்சுவார்த்தை நடத்தியபோது மோசேக்கு வயது என்ன?
11. ..................................நாடே பாழாகி விட்டது.
12. எகிப்து நாடெங்கும் .................. பெய்வித்தா ஆண்டவர்
13. நாளைய தினமே உன் எல்லைகளுக்குள் .................... வரச் செய்வேன்.
14. மூன்று நாட்களாக எகிப்து நாட்டை ...................... கவ்வியிருந்தது.
15. .................. அந்த இரவிலேயே உண்ண வேண்டும்.
16. ஏழு நாட்களாக உங்கள் வீடுகளில்.................. காணப்படவே கூடாது.
17. ................ அனைத்தையும் எனக்கு அர்ப்பணம் செய்.
18. இஸ்ராயேல் மக்கள் கடலின் .................. நடந்து சென்றனர்.
19. ஆண்டவரே உம் ................... வலிமையில் மாண்புற்றது.
20. ......................... என்றென்றும் அரசாள்வார்.




– **P.ஆல்வின் அண்ணாமலை,**
தலைமை ஆசிரியர் (ஓய்வு).


### அடுத்த இதழ்

**கிறிஸ்து பிறப்பு, திருவருகைக்காலம், அமல அன்னை, திருக்குடும்பம் ஆகிய கருத்துக்களை தாங்கி வரவிருக்கிறது. இவைகளைப் பற்றிய கருத்துக்கள், கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் வந்து**

**சேர வேண்டிய கடைசி நாள் : 15-11-2014**

**சந்தாதாரராக ஆகுங்கள் !** **அன்னையின் அருள் பெறுங்கள் !**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.08.2014**

# திருத்தல வழிபாடுகள்

- ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை குணமளிக்கும் ஜெப வழிபாடு. 10.00 மணி முதல் 11.00 மணி வரை மலையாள மொழியில் திருப்பலி 11.00 மணி முதல் 12.00 மணி வரை ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு ஆலயத்தைச் சுற்றி திருக்கல்யாண அன்னையின் சப்பரப்பவனி. 12.00 மணிக்கு நவநாள் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். தேவைக்கேற்ப மாலை 4.00மணிக்கும், 6.30 மணிக்கும் திருப்பலி நடைபெறும்.
- முதல் சனி தவிர்த்து மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு எரியும் மெழுகுவர்த்தியை கரத்தில் ஏந்தி ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு தேரோட்ட வீதியில் திருக்கல்யாண அன்னையின் சிறிய சப்பரப் பவனி நடைபெறும். அதைத் தொடர்ந்து நவநாள் திருப்பலியும், நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.
- மாதத்தில் முதல் செவ்வாய் அந்தோணியார் கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் முதல் புதன் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள லூர்துமாதா கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் இரண்டாவது புதன் காலை திருத்தலத்தில் திருப்பலி, மாலை நான்கு சந்தி கெபியில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் முதல் வெள்ளி நோயாளிகளை வீட்டில் சந்தித்து நற்கருணை வழங்குதல்
- மற்ற நாட்களில் காலை 6.00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.

மாதத்தின் முதல் வெள்ளி மற்றும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர்வாதம் நடைபெறும்.

**இணையூர் வழிபாடுகள்.**

**நவமுதலூர்**

- ஞாயிறுதோறும் ஊர் ஆலயத்தில் மாலை திருப்பலியும், வெள்ளி மாலை புனித மிக்கேல் அதிதூதர் கெபியில் திருப்பலியும் மற்றும் மக்களின் தேவைக்கேற்ப வார நாட்களில் திருப்பலியும் நடைபெறும்.

## திருக்கல்யாணத்தாய் திருத்தலப் பெருவிழா

| | | |
|---|---|---|
| ஜனவரி 14 – | மாலை 6.00 மணி | திருவிழா கொடியேற்றம் |
| ஜனவரி 21 – | மாலை 6.00 மணி | சிறப்பு நற்கருணை பவனி |
| ஜனவரி 22 – | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசயத் தேர்பவனி<br>சிறப்பு மாலை ஆராதனை |
| ஜனவரி 23 – | காலை 6.00 மணி | திருவிழா திருப்பலி |
| | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசய தேர்ப்பவனி<br>நற்கருணை ஆசீர் |